Registered No. M. 878.

सत्यात् नास्ति परो धर्मः

# பூர்ணசந்திரோதயம்.

**A Tamil Monthly Journal**

**Devoted to Theosophy, Religion, Science, Art and Civilization.**

தொகுதி 6 } 1915௵ அக்டோபர்மீ ராக்ஷஸ௵ அய்பசிமீ { பகுதி 6.

அ. ரங்கசாமி ஐயர், B.A.,B.L.,F.T.S, பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை:

விக்டோரியா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy Right Reserved.

192

# பொருளடக்கம்.
# CONTENTS.

பக்கம்.

1. தற்கால நிலைமை--அ. ரங்கசாமி ஐயர். B A., BL., F.T.S. 201
From the Editor-A. Rangasamy Iyer. B.A., BL., F.T.S.

2. மீராபாய்—நாடகம் } ஆர். ஸ்ரீநிவாஸ ஐயர் M A. 208
Meera Bhai-Drama } R. Srinivasa Iyer M. A.

3. மதனப்பள்ளி-டி. யம். மொகையதீன் 215
Madanapalli—T. M. Mohideen

4. அன்பே முத்திநிலை—வி. அருணுசலம் 220
Love is Liberation—V. Arunachalam

5. லோககுருக்கள் (A. B.)-B. S. ராமசுப்பையர் 229
World Terches (A. B.)—B. S, Ramasubbier

6. தியானக்ரமவிஷயம்-கே. யஸ். ராமசந்திர ஐயர் 233
Meditations—K. S. Ramachandra Iyer.

---

## பிரஹ்மக்ஞான ஸபை.

இது 1875 ஞு நவம்பர் மீ 17உ நியூயார்க்கு நகரில் உண்டாகி 1905 ஞு எப்ரல்மீ 3உ மதராஸில் ஸ்தாபிக்கப்பட்டது. இதின் நோக்கங்கள்:—

1. ஜாதி, மதம், பால், வர்ணம் இவ்வேற்றுமைகளின்றி, மநுஷ்ய வர்க்கத்தினரின் ஸர்வத்ர ஸஹோதர பாவத்தை அதிகரிக்க, அஸ்திவாரமாக அமைவது.

2. ஸமதரிசன புத்தியுடன் இதர மதங்களையும் தத்துவ சாஸ்த்ரங்களையும் பிரகிருதி சாஸ்த்ரங்களையும் ஆராய்வது.

3. இதுவரை மநுஷ்யனுடைய நேரான அறிவுக்கு எட்டாத பல பிரபஞ்சநியதிகளை வியக்தமாயுணர்வதற்குச் சாதநமாக, மநுஷ்யனிடத்தில் குப்தமாயுள்ள சக்திகளை விகஸிக்கச் செய்வது.

இச்சபையோர் தத்துவ தரிசநம் ஒன்றையே நோக்கி, ஆத்மக்ஞான விஷயமாய் உழைத்து, நாஸ்திகத்தைத் தொலைத்து, மத விஷயங்களில் அறிவுடன் கலந்த சிரத்தையை விளைத்து, மநுஷ்ய

193

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 6 } 1915ஆ அக்டோபர்மீ ராக்ஷஸஆ அற்பசிமீ { பகுதி 6.

## தற்கால நிலைமை.

பிரஹ்மக்ஞான ஸபையின் அக்ராசனத்தை வகிக்கிற மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையாரவர்கட்கு நாளிது அக்டோபர்மீ 1வயில், அவரது 68-வது வயது பூர்த்தியாகி, 69-வது பிராயம் தொடங்கியது. ஆகையால், இம்மாதத் தற்கால நிலைமையில் அவரது சரித்திரத்தையும் குணாதிசயங்களையும் எடுத்துக்கூறுவது பிரயோஜநமுள்ளதாகும். அவர் 1847-ம்ஆ அக்டோபர்மீ 1வயில் ஜனனமானார். 1891ஆ மேமீ 10வயில் பிரஹ்மக்ஞான ஸங்கத்தில் ஓர் அங்கத்தினரானார். மற்ற மதங்களைப் பொய் மதங்களென்று கண்டித்துக்கிறிஸ்துவமதமே உண்மையான தனி மதமென்று அச்சமயிகளால் சொல்லப்பட்டும், அம்மதாசாரியரின் விசாலமான மதக்கொள்கைகளைத் தத்தம் சிற்றறிவுக்குத் தக்கவாறு குறுக்கித் தத்துவஞானமற்றதாகச் செய்து, அச்சமயிகளால் தழுவப்பட்டும் வந்த, அக்

காலக் கிறிஸ்தவமதத்தில் வைராக்யமுள்ளவராக நமதம்மை யார் சிலகாலமிருந்து, அம்மதக் கொள்கைகளில் 1871-ம் ஹூத்தில் ஸந்தேஹத்தை யடைந்து, அதற்குப் பிறகு நாஸ்திகக்கொள்கைகளைத் தழுவி, அதன்பின் ஸோஷலிஸம் என்ற ஸமுதாய முறையைக் கைக்கொண்டு, இவைகளில் மனஸ்ஸமாதானத்தை யடையாமல், கடைசியாகப் பிராசீந குப்த வித்தையை H. P. பிளவாட்ஸ்கி அம்மையாரவர்கள் மூலமாக, அவரது 42-வது வயதிற் கைக்கொண்டார்கள்.

***

ஸ்ரீபெஸண்டு அம்மையார் 46-வது வயதுக்குப்பிறகு இந்துதேசத்திற்கு வந்து, சென்ற 22 வருஷகாலமாக, இத் தேசத்தை ஜனனபூமியாக உடையவர்கள் கூடத் தங்கள் தேசாபிமான உற்சாகத்தைக்கொண்டு ஸாதிக்கக்கூடாத ஒப்பற்ற நன்மைகளை, இத்தேசத்திற்குப் புரிந்திருக்கின்றனர். ஸநாதந தர்மத்தின் பிரதான தத்துவங்களை, இத் தேசத்தில் நம்மவர்களுக்குப் புலப்படும் பொருட்டும், வெளித் தேசங்களிலுள்ளோர்க்கு வெளியாகும் பொருட்டும் இயற்றப்பட்ட பல புத்தகங்கள் மூலமாயும், உபந்யாஸங்கள் வாயிலாயும், பத்திரிகை ரூபமாயும் வெளியிட்டிருக்கின்றனர். நம்மவர்கள் நம்முடைய மதத்தில் பிரதானமற்றவைகளைப் பிரதானமாகக் கைக்கொண்டு ஒருவரையொருவர் துவேஷித்துச் சச்சரவு செய்துகொண்டிருக்க, பலஸித்தாந்தங்களடங்கிய ஸநாதன தர்மத்தின் முக்கிய கொள்கைகளை ஒருங்குசேர்த்து ஸநாதந தர்ம புஸ்தகம் (Sanatana Dharma Text-Book) அவர்களுடைய முயற்சியால் வெளியிடப்பட்டிருக்கிறது. இந்திய தேசத்தில் இந்து வாலிபர்கள் தெய்வ பக்தியுடனும், சரீர தாட்டிகத்தோடும், உத்தம குணங்களோடும் கூடினவர்களாய் மனோதிடத்தையும்

அடைதற்கேதுவான கல்வியைப் பயிலுமாறு காசியிலும், மற்றும் சிலநகர்களிலும் அவர்களது முயற்சியால் வித்யாசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

***

காளிது அக்டோபர்மீ 1வயில் இந்தியா சட்ட நிருபண ஸபையில் ஆமோதிக்கப்பட்ட ஹிந்து சர்வ கலா சாலைச் சட்டம் (Hindu University Bill) அம்மையாரவர்களின் பிரதம பிரயத்தினத்தால் கைகூடினதென்றே நாம் சொல்லல் தகும். அச்சர்வ கலாசாலையானது காசியில் ஸ்தாபிக்கப்பெற்று ஊக்கத்துடனும், உத்ஸாஹத்துடனும், விவேகத்தோடும், கல்வியோடும் கூடிய ஞானத்துடனும் நடைபெறின், அது இந்துக்களுக்கு உலகத்தோரில் ஒரு உன்னத ஸ்தானத்தைக் கொடுக்கத்தக்கதன்றோ! இந்துப்பெண்களுக்குரியனவாக ஆரியமதம் கூறுகின்ற குணநிசயங்களை அவர்கள் நழுவவிடாமற் கல்விகற்குமாறு, அம்மையாரின் முயற்சியால், கல்விச்சாலைகள் பல இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

***

இப்போது அவர்கள் இராஜாங்கரீதியாக இந்த தேசமானது பிரிட்டிஷ் இராஜ்ய மண்டலத்தில் மற்ற அங்கத்தினர்போல ஸமமான ஸ்தானத்தைத் தற்காலம் நிகழும் யுத்தம் முடிந்தவுடன் அடையவேண்டும் என்ற ஸங்கல்பத்துடன், இளமைப் பருவத்திற்குரிய உத்ஸாஹத்துடனும் தேசவலிமையுடனும் வெவ்வேறு அபிப்ராயபேதங்களுடன் சிதறிநிற்கின்ற நம்மவர்களை ஒருங்கு கூடச்செய்யும் ஸாமர்த்தியத்துடனும் உழைத்து வருகின்றதை நாமெல்லோரும் பார்த்து அவர்களிடம் பரம விசுவாசத்தையும், அன்பையுங் காட்டக் கடமைப் பட்டிருக்கின்றோம். அவர்களு

டைய முயற்சியானது நமது தேசத்திற்குமட்டும் ஸம்பந்தப்பட்டதல்ல. உலகத்தில் பலதேசங்களில் அவர்களுடைய கிரந்தங்களாலும், உபந்யாஸங்களாலும், அவர்களுடைய அநுஷ்டான முறையாலும் நல்வழிப் பட்டவர்கள் அநேகர் உளர். இவ்விதமாக ஏககாலத்தில் உலகமெங்கும் மேன்மைப்படுத்தும் தலைவராகவும் போதகராகவும் உள்ளவர் அவர்களைப்போல் தோன்றல் அரிது.

***

அவர்களுக்குரிய உத்தம குணங்களில் மூன்று குணங்கள் பிரதானமாக எடுத்துக் கூறத்தகும். அவைகளாவன:- (1) ஸத்தியம். (2) தைர்யம். (3) பிறர்நலம் கருதல். இந்த மூன்று குணங்கள்தான் ரிஷிகளிடம் காணத்தக்கவைகள். இவைகளைத் தம்மிடத்தில் ஏற்படுத்திக்கொண்டவர்தான் ரிஷிகளின் ஸன்னிதானத்தை அடையத்தக்கவர். அன்னிபெஸண்டு அம்மையாரவர்கள் நாஸ்திகக்கொள்கைகளைக் கைக்கொண்டிருந்த காலத்திலும் இம்மூன்று குணங்களும் முதன்மையாக நின்றன. அக்கொள்கைகளைக்கைவிட்டு பிரஹ்மக்ஞானத்தைக் கைக்கொண்டு அதை உலகமெங்கும் பரவச்செய்ய முயலுங் காலத்திலும் அம்மூன்று குணங்களே பிரகாசிக்கின்றன. மநு முதலாகிய ராஜரிஷிகளால் அநுஷ்டிக்கப்பட்ட கர்மயோகமானது ஸத்தியத்தைக் கைக்கொண்டு உலகத்தின் க்ஷேமத்தை நாடுகின்ற தீரர்களால் மட்டும் செவ்வையாய் அநுஸரிக்கத் தக்கதென்று அவர்களுடைய சரித்திரத்தால் நன்கு விளங்குகின்றது. அக்குணங்களின் பலத்தால் இந்த யுத்தத்தின் முடிவில் இந்தியதேசத்திற்கு பிரிட்டிஷ் ராஜ்ய மண்டலத்தின் இதரபாகங்கள்போல் ராஜாங்கமுறைகள் ஏற்படவேண்டுவதை ஸ்தாபனம் செய்வதற்குரிய புதிய வேலைகளைக் கைக்கொண்டிருக்கிறார்கள்.

இப்போதிய காலத்திற்கு அவர்களைப்போன்ற தலைவர் ஏற்படவேண்டியது அதிபவசியம். இக்காலம் இரண்டு சிறு கல்பங்களின் சந்தியாக விருக்கின்றது: கால இயற்கைக்கு ஒவ்வாத பழைய ஆசரணைகள் மாறி, கால இயற்கைக்குத் தக்கவாறு அவைகள் அமைக்கப்படவேண்டும். எவ்வாறு வாலிபத்திற்குரிய உடைகள் வயது வந்தபிறகு மாறவேண்டுமோ, அதுபோல் ஒரு காலத்திற்குரிய முறைகள் வேறொரு காலத்திற்கு ஒவ்வாமல் போகின்றன. இதைத் தான் நம் முன்னோர்கள் காலதர்மம் என்றும் யுகதர்மம் என்றும் கூறுகின்றனர். அவ்விதமாக மாறுதல்கள் காலத்திற்குத் தக்கவாறு ஏற்படவேண்டியனவேஆயினும், அம்மாறுதல்கள் தோஷத்தை உண்டுபண்ணாமல் நன்மையைப் பயக்குவதற்கு, அவைகள் ஸர்வக்ஞர்களாகிய ரிஷிகள் சம்மதத்தின்மேல், அவர்கள் மூலமாய் ஏற்படுத்தப்படவேண்டுமென்ற தத்துவத்திற்கு இதுவே காரணமாகும். அந்த ரிஷிகளின் ஸன்னிதானத்தை அடைந்து, அவர்களது ஆக்ஞையை நிறைவேற்றுவதையே மேலான கைங்கர்யமாகக் கருதி நடந்துவருகின்ற அன்னிபெஸண்டு அம்மையாரின் சரித்திரம் இத்தேசாபிமானிகளுக்கு உற்சாகத்தையும் தைரியத்தையும் உண்டு பண்ணுகின்றது.

***

பக்திமார்க்கத்தைக் கைக்கொண்டு அவர்கள் தங்குமிடமெங்கும் சாந்தத்தையும் அருளையும் பாவச்செய்யும் பெரியோர்களின் வழி உலகோர்க்குப் பொதுவாக ஏற்றுக் கொள்ளத்தக்கதாயிருக்கும். அவர்களது கௌரவத்தை உலகினர் சுலபத்தில் அறிந்து, அவர்களது உயர்ந்த குணங்களைக் கொண்டாடுவார்கள். உலகினர் செய்கைகளுக்கும் அவர்களது செய்கைகளுக்கும் முரண் ஏற்படாததால் அவர்கள் உலகோர்களால் பெரும்பாலும் துவேஷிக்கப்படு

கிறதில்லை. ஞானமார்க்கத்தில் நின்று உலகத்தோரின் அக்ஞான அந்தகாரத்தை அகற்றும் பெரியோர்களை சாமாந்யர் சில காலங்களில் உதாஸீனமாய்க் கவனிக்காமலும் சில சமயங்களில் அவர்கள் சிற்றறிவுக்கேற்ற கொள்கைகளை, அப்பெரியோர்கள் கண்டனம் செய்யின், அப்பெரியோர்களை துவேஷிக்கிறதுமுண்டு. கர்ம மார்க்கத்தில் உலகத்தாரோடு கலந்து, அவர்கள் செல்லும் பலவழிகளில் ஏற்படும் குற்றங்களை எடுத்துக் காட்டும் பெரியோர்களை உலகத்தார் நன்ருய் அறியார்கள். அப்பெரியோர்களுடைய அளவிறந்த கருணையையும் ஞானத்தையும் குதர்க்க புத்தியுடைய உலகத்தினர் அறிந்துகொள்ளாமல் துவேஷிப்பார்கள். கருமயோகிக்கு எல்லாச் செயல்களும் ஈசுவர சம்பந்தமாகவே தோன்றுகின்றன. அவர் ஆசாரியராய் போதித்தாலும், யுத்த வீரராய் போர்புரிந்தாலும், பூபாலராய் ஆளுகையைக் கைக்கொண்டாலும், வணிகராய் வியாபாரம் செய்தாலும், கல்வி, கலை, ராஜாங்கம் ஜனசமூக சீர்திருத்தம் முதலிய மானிட சம்பந்தமான பல விவகாரங்களில் தலையிட்டுக் கொண்டாலும் அப்பிரவிர்த்திகளெல்லாம் கரும யோகிக்கு ஈசுவர சங்கல்பத்தினுல் நிகழும். ஜீவர்களுடைய விகாஸ முறையை மேல்நோக்குச் செய்யும் ஸாதனங்களாகவேதோன்றும். அக்கர்மயோகிகள் உலகத்தை மேன்மைப்படுத்தும் எல்லாக் காரியங்களையும் செய்வார்கள். மாதுஸ்ரீ அன்னி பெஸண்டு அம்மையார் அவ்வித கர்ம யோகியானவர். அவ்வழியில் நிற்போர் முற் காலங்களில் கூறப்படும் மநு, ஜனகர் முதலான ராஜரிஷிகள் போன்றவர். ஆகையால் அன்னிபெஸண்டு அம்மையார் இதுவரை உலகத்தோரின் நன்மையைக் கருதிக் கைக்கொண்ட பிரவர்த்திகள் பல

அவைகளின் மூலமாய்ப் பலர் அவர்களை அறியாது துவேஷித்தும் விரோதித்தும் வந்திருக்கின்றனர். இவ்விதமாய் ஏற்படும் விரோதத்தை வென்று, துவேஷத்தை அன்பினால் மாற்றி, எதிர்நிற்கும் எல்லாப் பிரதிபந்தகங்களையும் அடக்கி காரியத்தை முடிக்கவல்ல கருமயோகியின் பலம் அவருடைய ஆத்ம தரிசனத்தால் அவருக்கு ஏற்படுவதால்,மேற்கூறிய விரோதத்தையும் துவேஷத்தையும் பிரதிபந்தகத்தையும் அவர் பாராட்டார். அவைகள் அவருக்குத் தடையாக நிற்கமாட்டா.

***

இந்திய தேசத்தின் அபிவிருத்தியின் பொருட்டு தற்காலத்தில் நிகழும் பலவித பாஹ்யமான பிரவிர்த்திகளில் பரவித்தையைக்கைக்கொண்ட மகரிஷிகளின் ஆக்ஞைப் பிரகாரம் ஒழுகும் அம்மையாரவர்கள் நிலைநின்று உழைப்பதே இந்த தேசத்தின் பாக்கியமாகும்.

அ. ரங்கஸ்வாமி ஐயர்.

---

## நன்மொழி.

---

அறிவார மரர் தலைவனை நாடி
செறிவார் பெறுவர் சிவதத் துவத்தை
நெறிதான் மிகமிக நின்றருள் செய்யும்
பெரியாருடன் கூடல் பேரின்ப மாமே.

நில்லாது சீவ னிலையன்றென் வெண்ணி
வல்லா ரறத்துந் தவத்துளு மாயினார்
கல்லா மனிதர் கயவருலகினிற்
பொல்லா வினைத்துயர் போகஞ் செய்வாரே.

திருமந்திரம்.

## மீராபாய்.

(120-பக்கத் தொடர்ச்சி.)

### அங்கம் 1. களம் 2.

காலம்—மாலை. இடம்—கும்பாஜிராணாவி னரண்மனையிலோரறை. நாடக பாத்திரர்கள்—கும்பாஜி, சுந்தரீபாய், மீராபாய்.

---

சுந்—என்ன விசேஷம்? இரண்டு மூன்று நாட்களாகத் தங்களை யந்தப்புரத்திலே காணோம்.

(மீராபாயை நோக்கி) என்ன மீரா?

மீரா—ராஜாங்க விஷயமான அவசரக் காரியங்களே தாவதிருந்திருக்கும்:

கும்—ஆமாம். சென்ற இரண்டு மூன்று தினங்களாக நான் மந்திரியோடு ஒரு முக்கியமான சீர்திருத்தத்தைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன்.

சுந்—அந்தப் புரத்தையே நினையாதிருக்கச் செய்யும்படியான அவ்வளவு பெரிய காரியமா?

கும்—ஆம்.

சுந்—அப்படி யென்ன பெரியகாரியம்?

மீரா—அதையெல்லாம் நீ எதற்காகக் கேட்கின்றாயடி, சுந்தரீ? அரசர்களுக் கெவ்வளவோ காரியங்களிருக்கும்.

கும்—மீரா, நீ சொல்வது உண்மைதான். ஆனாலிந்தக் காரிய மப்படிப்பட்ட தொன்றுமல்ல. நமது ராஜ்யத்தில் சமீபத்தில் சில விசேஷங்களேற்பட்டிருக்கின்றன. இப்போதிந் நகரத்திலுள்ள திருடர்கள், சூதாடிகள் முதலிய

வர்களின்தொகை முன்னிருந்ததைவிட எவ்வளவோ குறைந்திருக்கிறது. ஆகையாலிப்போது காலக்ஷேபம் செய்து பிழைக்க வேலையில்லாமல் கஷ்டப்படும் ஜனங்களின் தொகை நிரம்ப அதிகரித்திருக்கிறது. அவர்களுக்கெப்படிப் பிழைக்கும் வழியை ஏற்படுத்திக் கொடுக்கிறதென்பதைப் பற்றித்தான் சில தினங்களாக மந்திரியோடிரவில் வெகு நேரம் வரைக்கும் கூடப் பேசிக்கொண்டிருந்தேன்.

சுந்—அப்படியா?

கும்—அஃதெல்லா மிருக்கட்டும். ஓரதிசயச் சமாசாரம் கேட்டாயா, மீராபாய்?

மீரா—என்ன சமாசாரம்: நாதா?

கும்—டில்லி சக்ரவர்த்தி அக்பர் சில தினங்களுக்கு முன் தன்சபைக்கு வந்திருந்த ஒரு கிருஸ்தவ பாதிரிக்குத் தன் ராஜ்யத்திலுள்ள நகரங்களில் கிருஸ்தவ மதத்தைப் பற்றிப் பிரஸங்கம் செய்யவும், இன்னுமனேக விடங்களிற் கிருஸ்தவக் கோயில்களைக் கட்டவும் அநுமதி கொடுத்திருக்கிறாராம். இவர் செய்துவரும் காரியங்கள் சில சமயங்களில் ஆச்சரியப்படத் தக்கவைகளா யிருக்கின்றன. இவர் ராஜ்யத்தை யாளுவதும் புதுமையாய்த்தா னிருக்கிறது.

சுந்—ஆமாம். நானும் மகம்மதியர்க ளிந்தியாவுக்கு வந்ததுமுத லிந்துஸ்தானத்தின் சரித்திரத்தைக் கவனித்திருக்கிறேன். இதுவரையி லிவரைப்போ லரசாண்டு வந்தவர்கள் கிடையாது. எந்தச் சக்கிரவர்த்தி காலத்தில் ஹிந்துக்கள் மகம்மதியர்களென்கிற பேதமில்லாமல் ராஜ்யத்திலுத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டு வந்தார்கள்? எந்த பாடிஷா காலத்தில் ஹிந்துக்கள் மகம்மதியர்களைக் கண்டு பயப்படாமலும் அவர்களிடத்திற் சந்தேகம் கொள்ளாமலுமிருந்து வந்தார்கள்? எந்தக்காலத்தில் நிலங்கள் சீர்திருத்தப்பட்டு நிலவரிசைகள் சரியாய்ப் போடப்பட்டிருந்தன.?

இவர் காலத்துக்குமுந்தி எங்கே பார்த்தாலும் ஹிந்துக்களை ஹிம்ஸிப்பதும், அவர்களைக் கொஞ்சங்கூட இரக்கமில்லாமல் வதைப்பதும், அநியாயமா யவர்களிடமிருந்து ஜாஸியா முதலான வரிகளை வசூல்செய்வதும்தான் ஸஹஜமாயிருந்தன. இந்தமாதிரி தன்னுடைய பிரஜைகளை யன்பினுலாண்டவர்க ளிதுவரையிலும் கிடையாது.

மீரா—இதுமட்டும் தானு? அவரொரு பெரிய மகானென்பதிற் சந்தேகமில்லை. ராஜ்ய பரிபாலன விஷயங்களில்தானிவர் வெகு சாமர்த்தியசாலியா யிருக்கிருரென்பதில்லை. ஆகாராதிகளி லிவருக்கிருக்கும் மிதத்துக்கும், ஈச்வரனிடத்தி லவருக்கிருக்கும் பக்திக்கும், வேறு மதஸ்தர்களிடத்தி லவர்க்குள்ள அன்பிற்கு மாதரவுக்குமெங்கே போகிறது? பாதப்பூரிலவரது பூஜாக்ருஹத்தில் தியானம் முதலிய யோகாப்பியாச க்ரமங்களை அநுஷ்டிக்கிருராம். இத்தேசத்து யோகிகளை மித்திரர்களாக்கிக்கொண்டு அவர்களிடத்திலிருந்து அநேக குஹ்யமார்க்க சம்பந்தமான விஷயங்களைத் தெரிந்து கொள்ளுகிருராம். தானுமுபதேசகர்த்தாவாயிருந்து தன் சிஷ்யர்களுக்கு உபதேசங்களைக் கொடுக்கிருராம். அவர் மொகலாயரராய்ப் பிறந்திருந்தாலென்ன? அவர் ஒருபெரிய யோகியென்றே நம்புகிறேன்.

கும்—மீரா நீ இந்த சமாசாரங்களையெல்லா மெப்படி அறிந்தாய்?—ஆனலிதிலென்ன ஆச்சரியம்? உங்களுங்கள் ஸ்வபாவங்களுக்குத் தக்கபடி விஷயங்களைக் கிரஹித்திருக்கிறீர்கள். மீரா, ஸுந்தரி, நீங்களிருவரும் நன்ருய்ப் பாடுகிறீர்கள். ஆனலுங்க ளிருவர்களுடைய கானத்தையும் ஒருதடவையிலாவது ஒரே சமயத்தில் நான் கேட்டதில்லை. இப்போதந்தக் கோரிக்கையை நிறைவேற்றிக்கொள்ளலாமோ?

மீரா—ஆஹா, அதற்கென்ன?

சுந்—நீங்களொன்று சொன்னாலதற்கு மறு பேச்சுண்டோ? யாரடியங்கே? நீலா.

(நீலா வருகிருள்.)

என்னறைக்குட்சென்று அங்குள்ள தம்பூரை சீக்கிரமெடுத்துவா.

(நீலா சென்று தம்பூரை யெடுத்து வருகிருள். சுந்தரியதை வாங்கிக் கொள்கிருள்.)

நீலா, இனி நீ போகலாம்.

சுந்த—(ஒரு ஜாவளியை அநேக சங்கதிகளுடன் பாடுகிருள்.)

கும்—பேஷ், சுந்தரி. மீரா, நீ பாடு கேட்போம்.

மீரா—(பகவத் விஷயமாக ஒருருக்கமான பாட்டைப் பாடுகிருள்.)

கும்—(கண்ணீர் சொரிந்து) மீரா,

இப்படியுமொரு சங்கீதமுண்டா?

மீரா—என் மீதுள்ள அபிமானத்தாலிப்படிச் சொல்லுகிறீர்கள். அப்படி யென்ன வென் சங்கீத முயர்ந்தது? சங்கீதம் கேட்கவேண்டுமென்ருல் நமது சுந்தரியிடத்தில்தான் கேட்கவேண்டும். என்னவோ எனது தாய்தந்தையர்கள் கற்றுக்கொடுத்த சங்கீதத்தை பகவத் விஷயத்திலுபயோகப்படுத்தி வருகிறேன்.

கும்—அதிருக்கட்டும். ஸ்திரீகளுக்குச் சங்கீதத்தாலென்ன பயன்? சுந்தரீ, முதலில் உன் அபிப்பிராயத்தைச் சொல்லு.

சுந்—ஒரு ஸ்திரீக்குத்தன் கணவனுடைய மனதை ஒருமிக்கச் செய்வதைவிட வேறென்னதானவள் சங்கீதத்தாலாகவேண்டும்?

மீரா—ஸ்திரீகளுக்குத் தங்கள் குழந்தைகளைத் தாராட்டச் சங்கீத முபயோகமாயிருக்கும். பொதுவாய் ஸ்திரீபுமான்களிருவருக்கும் பகவானைக் குறித்து பஜனை செய்வதில் சங்கீத முபயோகப்படும். இந்த உபயோகம் தான் மேன்மையான தென்றென தபிப்பிராயம். சுந்தரீ சொன்ன உபயோகமு முண்டு.

சுந்—ஆமாம். இவளுக்கெங்கேயிருந்தோ புதிது புதிதாய்த் தோன்றும். கொஞ்சம் பழைய நாள் ஜாடையிவளிட முண்டு.

கும்—சுந்தரீ, அப்படிச் சொல்லலாமா? உங்களிருவர் அபிப்பிராயமும் சரிதான்.

சுந்—சரிதானுவது! உங்கள் மனதைச் சந்தோஷப்படுத்துவதற்கல்லாமல் வேறெதற்காக எனக்கு என் சங்கீதம்?

மீரா—(எழுந்து) நாலயத்திற்குப் போகவேண்டும். நாழிகையாகிறது. எனக்கு உத்தரவளிக்கிறீர்களா?

கும்—இன்றைக்கென்ன விசேஷம், மீரா? காலையிற் தானங்குபோய் வந்தாயே. சாயந்திரம்கூட அங்கே போவானேன்?

மீரா—இன்றையதினம் கிருஷ்ண ஜயந்தியல்லவா?

கும்—ஆம், நீ ஆலயத்துக்குப் போய் வா.

(சுந்தரீயை நோக்கி) சுந்தரீ, எனக்கும் கொஞ்சம் வேலையாய் இருக்கிறது. நான் போயதைக் கவனிக்கிறேன். நீ யந்தப்புரத்திலிரு. அவ்வேலையை முடித்தபின்பு நானு மங்கே வருகிறேன்.

(கும்பாஜியும் மீராபாயும் போகிறார்கள்.)

சுந்—(தனக்குள்) அடீ, இந்த மீராபாய்க்கு வந்திருக்கிற அதிருஷ்டத்தைக் குறித்து நானென்ன சொல்வது? நேற்றைக்குத்தான் வந்தவள், இந்த அந்தப் புரத்துக்கு வந்து இன்னும் சரியாயிரண்டு வருஷங்களாகவில்லை, இதற்குள்ளிவளுக்கு வந்திருக்கிற பெருமையைப் பாரேன். எப்படியோ இந்த ராணுவை வசப்படுத்தித் தன் கைக்குட் போட்டுக்கொண்டு விட்டாளே! இதுவரைக்கும் சுந்தரீபாய் வார்த்தையை வேதவாக்கா யெண்ணியிருந்த ராணு இப்போதவள் வலையிற் சிக்கிவிட்டார்போல் தோன்றுகிறதே. இன்றைக்கவள் பாடினுள். அதென்ன பாட்டு. இந்தப் பாட்டுக்குமவர் கண்ணீர் வடித்தாரே. நான் போட்ட ஒரு சங்கதிக் கீடாகுமோ அவள் பாட்டு முழுவதும்? இந்தப் பாட்டை வைத்துக்கொண்டு எப்படியோ கேட்போர் மனதை யுருக்குகிருளே! அதிருக்கட்டும். இந்த மஹாராஜாவோடு விட்டாளா? இந்நகரிலுள்ளோர் யாவருமல்லவா இவளைத் துதிக்கிருர்கள். எங்கு போனுலுமவள் பேச்சுத்தானு? அவள் பக்தியைப் பற்றிப் புகழுவதுதானு? ஏதோ மகா தர்மிஷ்டையாம். கேட்டவர்களுக் கில்லையென்று சொல்வதில்லையாம். அவள் தானம் செய்கிறது யாருடைய சொத்து? பிறந்த வீட்டிலிருந்து மஞ்சள் காணிக்கை கொண்டுவந்தாளா? ராணுவுடைய தநம் தானே. கடைத் தேங்காயெடுத்து வழிப்பிள்ளையாருக் குடைப்பதென்ன தர்மம்? என்ன தானம்? ஜனங்களை ஏமாற்றி, அவர்களைத் தன்னைப்பற்றிப் புகழ்ந்து பேசும்படி செய்வதற்கு ஒரு தந்திரமல்லவா இது? ஆனுல் நானிந்த வேஷம் போடக்கூடாதோ வென்ருலிப்போதவள் செய்கிருளென்பதற்காக நானுமதைச் செய்கிறதா? நான் மாட்டேன். இப்

போதவள் தசரநாதன் வலுவாயிருக்கிருனே? இவளிந்த அரண்மனைக்கு வருவதற்குமுன் நானிருந்த விதமென்ன? எனக்கிருந்த சிறப்பென்ன? என்னிடத்தில் யாவருக்குமிருந்த மரியாதையென்ன? இப்போது நானிருக்கும் விதமென்ன? இப்போதிந்த ராஜாவைத்தவிர வேறு யாராவதென்னை லக்ஷியம் பண்ணுகிருர்களா? ஒரு காலத்திலிந்த சுந்தரியின் பெயருக்கிருந்த மஹிமையென்ன? எங்கே சென்ருலுமவளைப் பற்றித்தான் பேச்சு, அவளுக்குத்தான் மரியாதை. இப்பவோ, சுந்தரியை யார் கவனிக்கிருர்கள்? முன்னே நானிருந்ததைவிட எத்தனையோ மடங்கதிகமாகமல்லவோ இந்த மீராபாயிருக்கிருள்! அவளென்ன மாயம் செய்கிருளோ, அது ஈச்வரனுக்குத் தான் வெளிச்சம். அடா, தெருவிலலைந்து திரியும் பிச்சைக்காரர்கள் கூடவா இவளைப் புகழுவார்கள்! நாடுதோறு மலைந்து திரியும் தேசசஞ்சாரிகள் கூடவா இவளைக்கொண்டாடுவார்கள்! நானிதைக் கண்டெப்படிப் பொறுப்பேன்? எப்படிச் சகித்திருப்பேன்? இப்படியென் பெருமை குறைந்து இவளைப் பற்றிய புகழெங்கு மதிகமாய்ப் பரவ நான் கண்டு சகிப்பேனு? இருக்கட்டும். நானிதைத் தடுக்க ஏற்பாடு செய்கிறேன். இந்த மஹாராஜாவுக் கிவளிடத்திலிருக்கிற பிரியத்திஞலேயும் வெகுமானத்திஞலேயும் தானே இவளுக்கிந்தச் செருக்கு. பார்த்துக்கொள்ளலாம். இந்த மஹாராஜாவின் மனதைக் கலைக்க என்னுல் முடியாதா? அது ஒரு கஷ்டமான காரியமா எனக்கு? இப்போதே அப்படிச் செய்யலாமா, அல்லது கொஞ்சம் பொறுத்துப் பார்க்கலாமா? சீ, பொறுத்துப்பிரயோஜனமென்ன? நான் தாமஸிப்பேனுல் மஹாராஜாவுக் கவளிடத்திலுள்ள அன்பு மாதரவு மதிகரிக்கும். பிறகு என் காரியத்தை முடிப்பது கஷ்டமாய்விடும். ஆகையாலிப்போதே இக்காரியத்திலிறங்க வேண்டும். இன்றையதினம் முதலே ராஜாவை என் வசப்படுத்திக்கொள்ள யத்தனிக்கிறேன் (போகிருள்.)

(காட்சி முடிகிறது.)

R. ஸ்ரீநிவாஸ அய்யர்.

## மதனப்பள்ளி.

இவ்வூர் சித்தூர் ஜில்லாவைச் சேர்ந்தது. இவ்வூர் பார்ப்பதற்கு சிறிதேயாயினும் தபால் ஆபீஸ், தந்திஆபீஸ், தாலுக்ஆபீஸ், முன்ஸிப் கோர்ட், போலீஸ் ஸ்டேஷன் முதலிய உத்தியோக சாலைகளெல்லாம் நிறைந்து பெரிய பட்டணம் போலவே நிலவுகின்றது. ஓர் ஆஸ்பத்திரியும் இருக்கிறது. இந்நகரின் வீதிகளெல்லாம் மதுரை, சென்னை முதலிய பெரிய நகரங்களிற்போலவே மிகவும் ஒழுங்காக அமைக்கப்பட்டுள்ளன. இந்நகரத்தின் வடகிழக்கில் சுமார் 8 மைல் தூரத்தில் "மதனப்பள்ளி ரோட்" (Madanapalle Road) என்னும் ரெயில்வே ஸ்டேஷனொன்றுளது. ஜனங்கள் அந்த ஸ்டேஷனிலிறங்கி மோட்டாரிலாவது தபால் வண்டியிலாவது ஏறி இவ்வூருக்கு வருவார்கள். இந்நகரைச்சுற்றி ஓர் நதி செல்கிறது. அந்நதியின் இருபக்கங்களிலும் எப்போதும் பறவைகளுக் குறைவிடமாயிருக்கும் பசுமையான மரங்கள் அடர்ந்திருக்கின்றன. இந்நகர் இன்னும் மாஞ்செடி கொடிகளடர்ந்திருக்கும் குளிர்ச்சியாயுள்ள சிறு குன்றுகளால் சூழப்பட்டிருக்கிறது. இக்குன்றுகளினின்றும் எப்பொழும் பரிசுத்தமான மலைக்காற்று வந்துகொண்டே யிருப்பதனால் இவ்வூரில் எவ்வித வியாதியும் அணுகுவதற் கிடமில்லை. இதற்கு வடக்கே 4 மைல் தூரத்தில் சானடோரியம் (Sanatorium) ஒன்றுள்ளது. நோயாளிகளெல்லோரும் இவ்விடத்திற்கு வந்து தங்கள் நோயைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு தங்களுக் கிஷ்டமானவரையில் வசிப்பது வழக்கம். அன்றிச் சுற்றார்களிலுள்ள பிரபுக்களும் சுகத்திற்காக இவ்விடம் வந்திருந்து இன்பமாகக் காலங்கழிப்பது முண்டு.

இந்நகரத்திற்குக் கிழக்கே ஒரு மைலுக்கப்பால் பசனிக்கொண்ட என்றும், தென்மேற்கில் 3 மைலுக்கப்பால் மலையக்கொண்ட என்றும் இரண்டு குன்றுகளுள்ளன. இவ்வூர் ஆங்கிலக் கலாசாலை மாணவர்களும் உத்தியோகஸ்தர்களும் மாலையில் பசனிக்கொண்ட எனும் குன்றுக்கு உலாவச் செல்வார்கள். மேலும் இவ்வூரின் வடமேற்கில் ஹாஸ்லிக்கொண்ட என்றஓர் குன்றிருக்கிறது. அதில் மனிதர்கள் வஸிப்பதற்கேற்ற ஸௌகர்யங்களெல்லாம் நேர்த்தியாய் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு ஓர் பெரிய பங்களா இருக்கின்றது. இம் மதனப்பள்ளிக் காலேஜில் கல்விபயிலும் மாணவர்களெல்லோரும் தமக்குக் கிடைக்கும் தீபாவளி, தசரா போன்ற விடுமுறை நாட்களில் அவண் சென்று தம் விடுமுறைதினங்களைக் கழிப்பது வழக்கம்.

இங்கு எப்போதும் குளிர் காலமாகவே யிருக்கும். பேசுவது தெலுங்குபாஷையே.

மற்றும் இந்து தேவாலயம் (Temple) மகம்மதியர் பள்ளிவாசல் (Masjid), கிரிஸ்துவாலயம் (Church) முதலியவைகளுமிருக்கின்றன.

மிஷன் ஹைஸ்கூல் என்ற கிரிஸ்தவ உயர்தர கலாசாலை ஒன்றும் தியசாபிகல் காலேஜ் என்ற இந்துக் காலேஜ் ஒன்றும் உள்ளன. இக்காலேஜ், அதிநிறையருளுடை அநிபெஸண்ட் என்னும் அம்மையாரவர்களின் அக்கிராசனத்தின்கீழ் நடைபெற்று வருகிறது. அவ்வம்மையாரவர்களே அக்கிராசனாதிபதி. எர்னெஸ்ட் வுட் (Ernest Wood) என்னும் துரையே செக்ரட்டேரியாக இருக்கிறார். திரிலோகிகரென்போர் பிரின்சிபாலாகவும், கிரிராவ் என்போர் ஹெட்மாஸ்டராகவும் இருக்கின்றனர். இக்கலாசாலை (School) முன்பு ஹைஸ்கூலாக இருந்து 19—7—15ல்

தான் காலேஜாக லார்ட் பெண்ட்லண்ட் கவர்னரால் திறக்கப்பட்டது. இப்பொழுது இதில் ஸீனியர் இண்டர் மீடியேட் வகுப்புமுடிய இருக்கிறது. இதில் கல்வியபிலும் மாணவர்கட்குப் போஜனசாலை (Hostel) யொன்று ஏற்படுத்தி உணவருந்துவதற்குப் பிராமணர், சூத்திரர், மகம்மதியர், கிரிஸ்தவர் முதலிய பல வகுப்பினர்க்கும் பல அறைகள் தனித்தனி யமைத்துக் கொடுத்திருக்கின்றனர்.

இதில் பிரதானம் ஆங்கிலம்தவிர தமிழ், தெலுங்கு, வடமொழி, கன்னடமாகிய இவைகள் உபபாஷைகளாக அல்லது இஷ்ட பாடங்களாக (Optional language.) கற்பிக்கப்பட்டு வருகின்றன. இக்கலாசாலை உத்தியோகஸ்தர்களும் மாணவர்களுமாகிய எல்லோரும் ஒருவருக்கொருவர் சமர்தானமும் ஒற்றுமையும் சகோதரத்துவமும் பூண்டவர்கள். இன்னும் எல்லா மாணாக்கர்கட்கும் வேதாந்த வுணர்ச்சி உண்டாதற்பொருட்டு வாரத்தில் இரண்டு தினங்கள் தெலுங்கிலும் ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் முறையே தெலுங்குப் பண்டிதராலும் பகவற்கீதை கற்பிக்கப்பட்டு வருகிறது.

இக்கலாசாலை (காலேஜ்)யின் அங்கமாக வித்தியாபி விருத்தித் தமிழ்ச்சங்கச் சபை" யென்று ஓர்சபை ஏற்படுத்தி, அச்சபையில் தமிழ் மாணவர்களெல்லோரும் வாரம் ஒருமுறை (பிரதி சனிக்கிழமையும்)ஒவ்வொரு விஷயத்தை யெடுத்து உபந்நியசித்து வருகிறார்கள்.

இக்காலேஜில், இக்காலேஜ் தலைவர்(President)ஆகிய அநிபெஸண்ட் அம்மையாரவர்களின் 69வது வருஷம் பிறந்தநாட் கொண்டாட்டம் (1—10—15.) ல் நடை பெற்றது.

இவர் 1847-வருஷம் அக்டோபர் மீ முதல்தேதியில் பிறந்தனர், இவ்வருடம் இத்தினத்தில் இப்பிறந்தநாட் கொண்டாட்டத்தின் அறிகுறியாக இங்குநடந்த ஒவ்வொரு விசேஷச் சிறப்பையும் எடுத்துரைக்கச் சாத்ய மிலாயயினும், அக்காட்சிகளைக் கூர்ந்து கண்டானந்தித்த என்னிருதயம் பேரின்பம் பூரித்துப் பொங்கித் ததும்புகின்றமையால், அவைகளிற் சிலவற்றை ஈண்டெழுதுவேன்.

அம்மையார் பிறந்தநாளாகிய இத்தினத்தில் எல்லோரும் காலை 6 மணிக்குள் ஸ்நானம் முதலியவைகளெல்லாம் முடித்துக் கலாசாலையின் ஒவ்வொரு பாகத்தையும் அலங்கரிக்கவும், ஒவ்வொருவரும் தாங்கள் தாங்கள் வைத்திருக்கும் பெரியோர்களின் புகைப்படங்களையும் சரஸ்வதிபடம் கிருஷ்ணபடம் விநாயகர்படம் முதலியவைகளையும் புஷ்பங்களாலும் மாலைகளாலும் அலங்கரிக்கவும், அதன்பின் ஒவ்வொருவரும் 10 நிமிஷம் 15 நிமிஷங்கள்வரை தியானம் (Meditation) செய்யவும் மணி $7\frac{1}{2}$ ஆகிவிட்டது. $7\frac{1}{2}$மணியிலிருந்து 8 மணிவரையும் பிரின்ஸிபால் திரிலோகிகரின் அக்கிராசனத்தின்கீழ் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பாஷையில் வேதசாஸ்திரங்கள் (Scriptures) வாசித்தனர். அதன்பின் காலேஜ் ப்ரொபஸர்களி (Professors) லொருவராகிய Mr. M. V. வெங்கடேசுவர ஐயரவர்களின் அக்கிராசனத்தின்கீழ் அனிபெஸன்ட் அம்மையாரவர்களின் சரித்திரத்தை மாணவர்களும் மற்றுமுள்ள பெரியோர்களும் உபந்நியசித்தார்கள். அதன்பின் அக்கிராசனரெழுந்து, கேட்போர் தங்கள் மனமிழந்து பரவசமடையுமாறும் அக்கிராசனர்பேசும் பேச்சிலன்றி அச்சமயத்தில் இதரவிஷயங்களில்

செவிகேளாதும், கண்காணாதும், மனம் செல்லாது மிருக்குமாறும் உயர்ந்த குரலோடு சொற்சுவை பொருட்சுவை பொலிய அம்மையாரவர்களின் சரித்திர சம்பந்தமான ஒவ்வொருவிஷயத்தையும் விடாது விரித்துப் பேசிமுடிக்க, மணி 10 ஆகிவிட்டது. அதன்பின் அநிபெஸண்ட் அம்மையாரவர்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ள பகவத்கீதையென்னும் புத்தகங்கள் காலேஜ் மாணுக்கர்களுக்கு இனமளிக்கப்பட்டன. பின்பு இவ்விடம் வந்தோர்க்கெல்லாம் மிட்டாய் அளித்தார்கள். இது முடிந்தவுடன் ஏழைகளையெல்லாம் வரவழைத்து, அவர்கட்கு உணவுக்காக தானியங்களளித்ததுடன் வஸ்திரங்களும் அளவிலா தளித்தார்கள். பிறகு மாலையில் சங்கீதச்சபை நடந்தேறியபின் 6 மணிக்கு எல்லோருக்கும் பக்ஷண பாயசங்களோடு விருந்தளித்தனர்.

அதன்பின் இரவு 9 மணிக்குமேல் அம்மையாரவர்களின் ஜனனதினக் கொண்டாட்டத்தின் முக்கிய அடையாளமாக ஹாம்லெட் (Homlet)என்னும் ஆங்கில நாடகமும் கௌரியென்னும் தமிழ் நாடகமும்முறையே ஆங்கில மாணவர்களாலும் தமிழ் மாணவர்களாலும் வெகு விமரிசையாக நடத்திக் காண்பிக்கப்பட்டன.

டி. யம். மொகையதீன்,

உதவித் தமிழ்ப்பண்டிதர்,

மதனப்பள்ளி உயர்தர கலாசாலை.

# அன்பே முத்தி நிலை.

இவ்வியாசத்தின் தலைப்பெயரைக் கண்ணுற்றோர் ஒவ்வொருவருக்கும் அது எவ்விதம் சாத்தியமாகுமென்ற சந்தேகம் ஏற்படக்கூடியது சகஜமே. ஆனால் சிறிது ஆராய்ந்து பார்ப்பார்களாயின் அது உண்மையென்பதைத் தெரிந்து கொள்வார்கள்.

அன்பு என்னும் குணமானது உலகத்திலுள்ள சர்வ பிராணிகளிடத்தும் ஜீவஸ்வரூபமாக விளங்கிக்கொண்டிருக்கிறது. ஜீவன் ஈசுவரனுடைய அம்சமென்பதை யாவரும் அறிவார்கள். "அன்பே சிவம்" என்னும் ஆன்றோர் வாக்கியப்படி, ஈசுவரன் அன்பே ஸ்வரூபமாக வுடையவர். சகல பிராணிகளிடத்தும் உயிராக வியாபித்திருப்பதும் அதுதான். அன்பில்லாவிட்டால் ஒரு பிராணியும் ஜீவித்திருக்க முடியாது. தன்னிடத்தில் அன்பில்லாத பிராணி உலகத்திலேதாவதுண்டா? ஆகாரத்தை விரும்பாதபிராணி எது? எதற்காக விரும்புகிறது? தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டன்றோ? தன்னைக் காப்பாற்றிக்கொள்ள விரும்பாதது எது? ஒன்றுமில்லை. எதற்காகத் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள விரும்புகிறது? தன்னிடத்தில் தனக்கேற்பட்டிருக்கும் அன்பினாலன்றோ? அன்பின் சுபாவம் பற்றுதல். ஒன்றையொன்று நேசிப்பதற்குக் காரணம் அன்புதான். ஒரு வஸ்துவானது மற்றொரு வஸ்துவோடு பொருந்த வேண்டுமானால், அதற்கு அன்பு அவசியம். அன்பில்லாவிட்டால் ஒன்றோடொன்று ஒட்டாது.

இவ்வன்பானது பிராணிகளின் விகாச முறைக்குத் தக்கவாறு மேன்மேலும் வளர்ந்துகொண்டே வருகிறது.

எவ்வளவுக்கெவ்வளவு அன்பு விசாலிக்கிறதோ அவ்வள வுக்கவ்வளவு விகாசமுறையின் அபிவிருத்தியைக் காண் பிக்கிறது. கீழான ஜன்மங்களில் பறவைகளாகவும் மிருக ங்களாகவுமிருக்கும்பொழுது, இவ்வன்பானது தன்னைமட் டும் பற்றிக்கொண்டிருக்கிறது சாதாரணமாக ஒருபசுவை யெடுத்துக்கொள்வோம். அது தனக்குக் கிடைத்திருக் கும் இரையைத் தன் கன்றுனது புசிப்பதற்குச் சமீபித்தா லும் அதை முட்டித் தள்ளிவிடுகிறது. மிருக ஜன்மத்திலி ருந்து முதல்முதல் மனிதனுக வரும்பொழுது ஒருவன் மிருக ஜன்மத்தின் உணர்ச்சியையே பெரும்பாலும் கொண் டிருப்பதால் அப்பொழுது அவன் அன்பானது தன்சரீரத் தைமட்டிலும் பற்றியதாக விருக்கிறது. தன்னுடைய சுகத் தை மாத்திரமே கவனிக்கிறுன். பெண்டுபிள்ளைகளென்ற விசுவாசம் அவனுக்குக் கிடையாது. பசி வந்த காலத்தில் அவர்களையும் கொன்று புசித்துவிடுகிறுன். இவ்வித மனி தர்களைப்பற்றி கிறிஸ்துவ பாதிரி ஒருவர்தாம் நேரில் பார் த்த விஷயத்தை அடியில் வருமாறு கூறுகின்றுர். அதா வது கிறிஸ்துவ மதத்தைப் பிரசங்கஞ்செய்து ஜனங்களை நல்வழிப் படுத்துவதற்காக ஆப்பிரிக்காதேசத்துக்கு அவர் போயிருந்தபொழுது அவ்விடத்தில் ஒருமனிதன் தன் பெண்ஜாதியைக் கொன்று புசித்துக் கொண்டிருந்தான். இதைப்பார்த்த பாதிரியார் அடே இப்படிச் செய்யாதே மகாபாபம் என்று அவனுக்குப் புத்திசொன்னுர். அவன் வயிறுநிரப்பப் புசித்துவிட்டுப் பாதிரியாரைநோக்கி ஐயா! பாபம் என்று சொன்னீரே அவ்வாகாரம் எனக்கு மிக்க ருசியாகத்தானே இருந்தது என்று பதில் சொன்னுனும்.

இவ்வித சுபாவமுள்ள மனிதர்கள் இப்போது வெகுவாய்க் குறைந்துகொண்டே வருகிறார்கள்.

விகாசக்கிரமத்தில் இதைவிடச் சற்று மேலானபடியிலிருப்பவர்களிடம் இவ்வன்பானது தாம், தம் சம்சாரம், குழந்தைகள், பெற்றோர்கள்வரை வியாபித்திருக்கிறது. இவர்கள் செய்யுங் காரியங்களெல்லாம் தமக்கும், தம் பெண்டு பிள்ளைகளுக்குமாக மட்டு மிருக்குமேயன்றி வேறொருவருக்கும் பிரயோஜனகரமுள்ளதா யிராது. இதைவிடச் சிறிது மேற்படியி லுள்ளவர்களின் அன்பானது தாம், தம் குடும்பத்தார், தம் பந்துக்களாகிய இவர்கள்வரை பரவுகிறது. அவ்வித நிலைமையிலுள்ளவர்கள் தம்பந்துவுக்கு நேரிடும் சுகதுக்கங்களைப் பற்றியும் கவனிக்கிறார்கள். தம் பந்துவாயுள்ள ஒருவனுக்குப் பிறனொருவன் தீங்கிழைப்பானாயின், தாம் அவனுக்காகப் பரிந்து பேசுகிறார்கள். இன்னம் மேற்படியிலுள்ளவர்கள் தம் ஜாதியாரிடமும், அதற்கும் மேற்படியிலுள்ளவர்கள் தம் கிராமத்தாரிடமும், அதற்கும் மேற்பட்ட பல படிகளிலுள்ளவர்கள் முறையே தம் நகரத்தார்கள், நாட்டார்கள், தேசத்தார்களாகிய இவர்களிடமும் அன்பு பாராட்டுகிறார்கள். இதனாலேயே அன்பின் வியாபகமானது விகாசமுறையின் அபிவிருத்தியைக் குறிப்பிடவில்லையா? இதை அனுசரித்தே ஔவைப்பிராட்டியார் "தந்தை தாய் பேண்", 'சுற்றத்திற்கழகு சூழவிருத்தல்', 'ஊருடன் கூடிவாழ்', 'நாடொப்பன செய்', 'தேசத்தோடொத்துவாழ்' எனக் கூறியிருக்கின்றார். இவ்வாக்கியங்களொவ்வொன்றும் விகாசமுறைக்கிரமத்தில் ஒவ்வோர் படியிலுள்ளவர்களைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

சலனமற்ற ஒரு தடாகஜலத்தில் ஒரு சிறுகல்லை யெறிந்தால் அக்கல் விழுந்தவிடத்தைச் சுற்றி முதலில் சிறிய வட்டமொன்றும் அதற்கப்பால் சற்று பெரியவட்டமும் பிறகு வரவா ஒன்றின்பின் ஒன்ருய்ப் பல பெரிய வட்டங்களும் ஏற்பட்டுக் கொண்டுபோய் கடைசியில் ஏற்படும் பெரியவட்டமானது நாற்புறமுமுள்ள கரைகளைப்போய் மோதுகின்றதல்லவா? அதேமாதிரி நம்முடைய அன்பானது கொஞ்சங் கொஞ்சமாக விருத்தியாகி உலக முழுவதும் வியாபிக்கவேண்டும். அவ்விதம் வியாபித்தால் நாமும் கடவுளைப்போல் சர்வ வியாபக முள்ளவர்களாய்விடுவோம். பந்து, அயலான் என்ற பாரபக்ஷமும், சத்ரு மித்ரன் என்னும் பேதமும், மிருகம் மனிதன் என்னும் தாழ்மை மேன்மையுமின்றி நம் அன்பானது உலகத்திலுள்ள சர்வ ஜீவராசிகளிடத்தும் குறைவறப் பரவுமாயின் அதுவே முத்திநிலை. அனதுபற்றியே நாயனர்

"அந்தணரென்போ ரறவோர் மற்றெவ் வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழு கலான்." எனக் கூறியிருக்கிருர்.

இப்போது நம்முடைய பெண்டு பிள்ளைகளிடத்தும், அயலோரிடத்தும், சிநேகிதரிடத்தும், பந்துக்களிடத்தும் நமக்கேற்பட்டிருக்கும் அன்பானது ஒரு பலனைக்கருதி ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய சுகத்தைக்கோரியே பெண்டு பிள்ளையிடத்தில் அன்பாயிருக்கிறேம். சுற்றத்தாரிடமும், ஜாதியாரிடமும், ஊராரிடமும், நாட்டாரிடமும், தேசத்தாரிடமும் நம் சுகத்தைக்கருதியே அன்பு பாராட்டுகிறேம். அதுமட்டுமல்ல. கடவுளிடத்து நமக்கேற்பட்டிருக்கும் அன்புகூட பலனைக்கருதியதே.

நம்முடைய அன்பு எப்படிப்பட்டதா யிருக்கவேண்டும்? கடவுளுடையதைப் போலிருக்கவேண்டும். கடவுள் ஜீவராசிகளிடம் எவ்விதமான அன்புள்ளவரா யிருக்கிறார்? நம்மிடமிருந்து ஏதாவது பலனை எதிர்பார்த்தா நம்மிடம் அன்பாயிருக்கிறார்? உலகத்திலுள்ள சகல பொருள்களும் அவருடையதா யிருக்கும்போது அவர் நம்மிடமிருந்து எதை எதிர் பார்க்கிறார்? ஒன்றுமில்லை அப்படியிருந்தும் நமக்கு வேண்டிய சகல சௌகரியங்களையும் உண்டுபண்ணி கொடுக்கிறார். தன்னுடைய குழந்தைகளாகிய சர்வ பிராணிகளும் சுகமாயிருக்க வேண்டுமென்பதே அவருடைய விருப்பம். அதுபோலவே நம்முடைய அன்பானது பலனை எதிர்ப் பார்க்காமல் உலகமுழுவதும் வியாபிக்கவேண்டும்.

பலனை உத்தேசிக்காவிட்டால் எதற்காக நாம் மற்றவர்களிடம் அன்பாயிருக்க வேண்டுமென்று சிலர் நினைக்கக் கூடும். கடவுள் எதற்காக நம்மிடம் அன்புபாராட்டுகிறார்? நாம் செய்யும் பூஜை நைவேத்தியங்களுக்காகவா? அவரிடத்தி லில்லாததும் அவரால் சிருஷ்டிக்கப் படாததுமான வஸ்துவைக்கொண்டா நாம் அவரைப் பூஜிக்கிறோம்? இல்லவேயில்லை.

பெண்டு பிள்ளைகளால் ஏற்படும் சுகத்தைக் குறித்து அவர்களிடம் அன்பு பாராட்டாதே. அவர்களிடமிருக்கும் ஆத்மாவைக்குறித்து அவர்களை நேசி என உபநிஷத்துக்களிற் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் சர்வபிராணிகளிடத்தும் விளங்கும் கடவுளின் அம்சமாகிய ஆத்மாவைக்குறித்து நாம் எல்லோரிடமும் அன்பைச் செலுத்த வேண்டும்.

இவ்விதம் செய்வது அசாத்திய மென்றும், அநுபவத்துக்குக் கொண்டுவர முடியாத விஷயமென்றும் பலர் நினைக்கக்கூடும். அப்படியல்ல- எத்தனை ஸ்திரீகள் தம் கண

வரிட மிருந்த அன்பால் தம் சரீரத்தையே தியாகஞ் செய் திருக்கிறார்கள். எத்தனை தாய்மார்கள் தம் குழந்தைகளுக் காக உயிரையுங் கொடுத்திருக்கிறார்கள். எத்தனை பக்தர் கள் கடவுளிடமிருந்த அன்பால் தம் தேகத்தையும், குழந் தைகளையும் அர்ப்பணஞ் செய்திருக்கிறார்கள். அரிச்சந் திரன் சத்தியத்தினிடம் தான்வைத்திருந்த அன்பால் சகல சம்பத்துக்களையும், புத்திர மித்திர களத்திராதிகளையும் தியாகஞ் செய்துவிடவில்லையா? இலக்குமணன், பரதன் ஆகிய இருவரும் தமையனிடமிருந்த அன்பால் பதினான்கு வருடகாலம் முறையே ஆகார, நித்திரை முதலியவற்றை யும், தனக்குக்கிடைத்த இராஜ்ஜிய சுகத்தையும் தியாகஞ் செய்யவில்லையா? ததீசிமுனிவர் தேவர்களுக்குத் தம் முது கெலும்பைக் கொடுக்கும்பொருட்டுத் தம்முடலை நீக்கவில் லையா? இவைகளெல்லாம் கட்டுப்பாடான புராணக் கதைக ளென்று எண்ணவேண்டாம். உண்மையான விஷயங்களே.

அன்பின் சரியான சுபாவத்தை நாம் நன்றாக அறிந்தி லோம். பரிபக்குவத்தால் வெள்ளியம்பலத்தைச் சேர்ந்த குருநாதரிடம் சிஷயர்களாக அமைந்துளோர்தான் அன் பின் சுபாவம் இத்தன்மையதென்று அறிவார்கள். குரு நாதர்களிடமுள்ள அன்பையும் நம்மிடமுள்ள அன்பையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பக்ஷத்தில் அவர்களிடமுள்ள அன் பை ஒரு சூரிய தேஜஸுக்கும் நம்மிடமுள்ள அன்பை ஒரு அழுக்கடைந்த கண்ணாடியில் தோன்றும் அச்சூரிய தேஜஸின் பிரதிபிம்பத்துக்கும் சமானமாகச்சொல்லலாம். அவர்கள், நாயனார் கூறியுள்ளபடி, சகல பிராணிகளிடத் தும் பரம அன்போடு கூடியவர்கள். அவர்களுடைய அன்பு யாதொரு பிரதிப்பிரயோஜனத்தையும் கருதாதது.

அன்புடைமையே அவர்கள் சுபாவம். குருநாதர்களென்று சொல்லப்படுவோர்க ளெல்லோரும் நம்மைப் போன்ற படிகளிலிருந்து விகாசமுறையில் மேற்சென்றவர்கள்தான்.

நம்மிடமிருக்கும் ஈசுவர சுபாவமாகிய அன்பை நாம் விருத்தி செய்யவேண்டும். அன்பில்லாத உயிர்வாழ்க்கை பிரயோஜனமற்றது. அன்பில்லாதவன் உயிரற்ற பிரேதத்துக்குச் சமானம். இதைத் திருவள்ளுவனர்

"அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பார்க்கண்
வற்றன மரந்தளிர்த், தற்று" எனவும்
அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு. எனவும் கூறியிருக்கிறுர்.

இப்போது சமீபகாலத்தில் அவதாரஞ் செய்யப்போவதாகச் சொல்லப்படும் மஹானுடைய சுபாவம் அன்புதான். அவருக்குப் பெயரே "மைத்திரேயர்" அதாவது அன்புள்ளவர் என்று சொல்லப்படுகிறது. கலியுகத்தில் ஜனங்களுக்கு ஞானத்தைப் போதிப்பதற்காக ஏற்பட்டிருக்கும் ஞானுசிரியர் இவரே. சாக்ஷாத் கிருஷ்ணபகவானுல் இம்மஹானிடம் இதைப் பொறுப்புக் கட்டப்பட்டிருப்பதாக பாகவதம் முதலிய புராணங்கள் கூறுகின்றது. அன்பை நமக்குப் போதிப்பதற்காகவே அவர் இப்போது அவதாரஞ் செய்யப்போகிறுர்.

உலகத்தில் இப்போதேற்பட்டிருக்கும் பல கொடுமைகளுக்குங் காரணம் அன்பின்மையன்றே? உலகத்தில் நடக்கும் கொள்ளை, கொலை, வஞ்சனை, சூது, யுத்தம் முதலியவை யாவும் அன்பின்மையினுலேயே. நாம் ஒருவருக்கொருவர் உண்மையில் அன்புள்ளவர்களா யிருப்போமாயின் நியாயாதிபதிகளும், போலீஸ்காரர்களும், சிப்பாய்

களும், நியாயஸ்தலங்களுக்கு எதற்காகவேண்டும்? அவசியமேயில்லை. தான் வேறு அயலான் வேறு என்னும் பிரத்யேக பாவம் மேலிட்டிருப்பதனாலன்றோ இக்கொடுமைகள் நடை பெறுகின்றன! இவ்வித பிரத்யேக பாவத்தை மாற்றி சர்வத்ர சகோதர பாவத்தைப் பாராட்டுவோமாயின் இக்கொடுமைகள் தாமாகவே ஒழிந்து போகுமல்லவா?

நம்மிடம் அன்பில்லாவிட்டால் நாம் செய்யும் நித்ய நைமித்தக கருமங்களாகிய கர்மானுஷ்டானங்களும், தான தருமங்களும் என்ன பயனுடைத்து? முக்கியமாக நம்மிடம் இன்சொல், சத்தியம், ஈகை, அன்பு ஆகிய இக்குணங்கள் இருக்கவேண்டும். அன்புடைமை என்னும் குணமொன்று மட்டும் ஒருவனிடமிருக்குமாயின் அவனிடம் மற்றெல்லா நற்குணங்களும் தானே வந்து சேரும். அன்பு ஒன்று தான் நம்மை ஜனனமரண பந்தத்திலிருந்து விடுவிப்பது. அஃதில்லாமலிச் சாகரத்தைத் தாண்ட முடியாது. இச்சாகரத்தைக் கடந்துசெல்ல அதுவே தெப்பம்.

அன்புடையவனுக்கு விரோதி ஒருவனுமேயில்லை. சகல பிராணிகளும் அவனை நேசிக்கும். நாம் உலகத்தை எப்படி நடத்துகிறோமோ அவ்விதமே அதுவும் நம்மை நடத்தும், கண்ணாடியில் முகத்தைப் பார்க்கும்போது நாம் சந்தோஷமாயிருப்போமானால், கண்ணாடியில் தோன்றும் நமது பிரதிபிம்பமும் சந்தோஷமாகக் காணப்படும். அவ்விதமின்றி நாம் முகத்தைச் சுளித்துக்கொண்டு பார்ப்போமானால் அதுவும் முகத்தைச் சுளிக்குமல்லவா? உலகமானது ஒரு கண்ணாடிக்குச் சமானம். நாம் அன்பாயிருந்தால் உலகமும் நம்மிடம் அன்பாயிருக்கும்.

ஆனால் நம்மிடம் இவ்விதமான அன்பொன்றுமில்லை யே எனக் கவலைப்படத் தேவையில்லை. நம்மிடம் அன்பு இருக்கிறது. அன்பில்லாவிட்டால் ஜீவித்திருக்கமாட்டோம். ஆனால் அது இன்னம் பிரபலமாகவில்லை. அதைப் பழக்கத்துக்குக் கொண்டு வருவோமாயின் நாளடைவில் விசாலமாகும். ஈசுவரனுடைய அம்சமும் அவருடைய குழந்தைகளுமாகிய, நம்மால் செய்ய முடியாத காரியம் ஏதாவது உண்டா? ஒன்றுமில்லை. ஈசுவரனிடம் எவ்வெக் குணங்களிருக்கின்றனவோ அவைகளை நம்மிடமும் ஏற்படுத்திக்கொள்ளலாம். ஆனால் அதற்கு வேண்டியது முயற்சியொன்றே.

நாளைச் செய்வோம் நாளைச் செய்வோம் என்று காலத்தைக் கழிக்காமல் இப்போதே முயல்வது நம்முடைய கடமையாக விருக்கிறது. அம்மஹான் வருங்காலமோ சமீபித்துவிட்டது. அன்பின் உண்மையான சுபாவத்தை அவர் தான் வெளியிடப்போகிறார். அதனால் தான் அவர் பெயர் மைத்ரேயர் என்று சொல்லப்படுகிறது. அன்பு நம்மிடமிருந்தால் தான், அவரை நாம் அறியலாம். அவர் வந்துவிட்டுப் போனபிறகு, ஐயகோ! அப்போதே சொல்லக்கூடாதா, சொல்லியிருந்தால் நான் கவனித்திருப்பேனே என்று வருத்தப்படுவதிற் பயனில்லை. இவ்விதமான வருத்தம் பின்னிட்டு ஒருவருக்கும் ஏற்படக்கூடாதென்பதற்காகவே அம்மஹானுடைய ஆக்ஞையால் முன்னோடிகள் அநேகர் இதை முரசறைவிக்கின்றனர். ஆகையால் ஜாக்ரதை! ஜாக்ரதை!!

V. அருணாசலம்,
கீழச்சிவல்பட்டி.

# லோக குருக்கள்.

நாம் முற்கால சரித்ரங்களை ஆராயுங்கால், மிகப்பிரகாசமாய் யாவருக்கும் வெளியாகக்கூடிய உண்மையொன்றுண்டு. அஃதாவது, உலகில் பற்பல காலங்களில், பற்பல தேசங்களில், பற்பல ஜாதியார்களுக்குள்ளும், தமது ஸந்நிதி * மாத்ரத்தாலே ஜீவகோடிகளை அநுக்ரஹிக்கும் பொருட்டு, உலகில் பெரிய ஞானாசார்யர்கள் தோன்றியுள்ளார். இது சரித்திர ஆராய்ச்சியுடையவர் எவரும் அறியாத உண்மையல்ல. நாம் எவ்வளவு மேலளாவிப் பார்த்தும் நம் பார்வைக்கு யேற்சென்று, அகண்டமாய் விரிந்து கிடக்கின்ற ஆகாயத்தின் கண் பளீர் பளீரென்று ஜ்வலிக்கும் நக்ஷத்ரங்களைப் போன்றல்லவோ, வியாஸர், ஹெர்மீஸ் (தாத), ஸாராதுஷ்ட்ரா, ஆர்பியஸ், பகவான் புத்தர், ஸ்ரீகிருஷ்ண பகவான், கிறிஸ்து, ஆகிய இவர்கள் உலக சரித்திரத்தில் முதன்மை பெற்றிருக்கின்றனர். சுக்ரனைப்போலவும், பிருஹஸ்பதியைப் போலவும், இப்புண்ய புருஷர்கள், பண்டைக்கால சரித்திரத்தில் பிரதானமாய் விளங்குகின்றனர். ராஜாதி ராஜர்களெத்தனையோ பேர்கள் அரசாண்டு, இப்போது மாண்டும் போயினர். அவர்களுடைய கீர்த்தியெல்லாம் தற்காலம் பஞ்சாய்ப் பறந்து போயிற்றன்றோ! சுத்த வீரனாய் எங்கும் வெற்றிக்கொடி நாட்டிய அலெக்ஸாந்தரையும், ஐந்தாம் சார்ல்ஸையும் இந்நாளில் கவனிப்பவர் யாவர்? ஆயினும் மேற்கூறிய மஹான்களின் மஹிமையோ, ஒருபோதும் மரகதமணி விளக்குப் போலல்லவா பிரகாசிக்கின்றது? இன்றைக்கும், பகவான் புத்தரையும், ஸ்ரீகிருஷ்ண பகவானையும், கிறிஸ்துவையும் தலை குனிந்து, கை கூப்பி நமஸ்கரித்துப் பக்தியுடன் போற்றுவோர் கோடாநுகோடியன்றோ! அவர்களுடைய தீவ்ரமான பக்தியை, என்று மழியாவன்பின் களஞ்சியம் என்று கூறல் தகும். லக்ஷக்கணக்கான ஜநங்கள், தம் உயிரை தியாகஞ் செய்வார்களேயொழிய, ஒருபோதும் தம் ஆசார்யரிடத்துள்ள நம்பிக்கையைக் கைவிடார்கள்.

இதுவரை, இந்த ஸ்தூல லோகத்தில் சரித்திர ஆராய்ச்சியால், அறியக்கூடியதை மேலே விவரித்தோம். இனி, உலக ஸம்பவங்கள் அனைத்தும் ஆகாயத்தில் சித்ரங்களாகப் பதிந்திருக்கின்ற சித்ரகுப்தர் கணக்கை ஸூக்ஷ்ம திருஷ்டியால் பார்ப்போர்

---

* தோற்றம்.

* Translated by B. S. Ramasubbier

கள், இப்பரமாசார்யர்களைப்பற்றியறிந்தளவானமான விஷயங்களிற் சிலவற்றையும் பார்ப்போம். ஓர் குறித்த காலமுழுமையும் உலகத்திற்கு ஞானாசார்யரான குருநாதன் ஒருவரே, அவரே லோககுருவென்றும், ஜகத்குருவென்றும், பரமாசார்யரென்றும் அழைக்கப்பெறுவர். உலகத்தின் மதங்களெல்லாவற்றிற்கும் அவரே நாதன். அவருடைய அநுக்ரஹத்தாலேயே ஒவ்வொரு மதமும் பரிமளிக்கின்றது. எந்தெந்தப் பெயரால் ஜனங்கள் அவரை உபாஸித்தாலும் அவர் ஒருவரே, அவர் ஞானமூர்த்தி, கருணைக்கடல், உயர்ந்த தியாகி. "தனக்கென வாழான் பிறர்க்குரியாளன்" என்று சொல்லத்தக்கவரே தியாகி, அவர் ஈசுவர பிரதிநிதியேயாவர். ஈசுவரனுடைய சித்தத்துடன் ஒருமைப்பட்டவர். அவர் மூலமாகவே ஈசுவரனின் அருள்வெள்ளம் உலகிற்கிறங்குகின்றது. அவர் ஒருவரே உலக முழுமைக்கும் ஓர் ஞானதீபமாக விளங்குகிறார். அவருக்கு ஏற்பட்ட காலம்வரை உலகிற்கு உழைத்து, அதன் பயனாக ஞானத்தில் பூர்ணம் பெற்றுக் கடைசியாக ஈசுவர ஆக்ஞையை நிறைவேற்றுமாறு உலகினர்க்குபதேசித்து, இப்பூவுலகை விட்டு மேற்பதவிக்குச் செல்லுகின்றனர். பிறகு லோககுரு ஸ்தானத்தை அவருடைய பிரதமசிஷ்யர் ஏற்றுக்கொள்ளுகிறார்.

இரண்டாவது, இப் பரமாசார்யரே வெவ்வேறு காலங்களில் ஒவ்வொரு பெரிய மதத்தை ஸ்தாபிக்குமாறு உலகில் தோன்றுகிறார். ஒவ்வொரு கல்பம், உபகல்பம் இவைகளில் மநுஷ்ய வர்க்கத்தின் மூல ஜாதியார்களும் (Root race) அவைகளின் உள் வகுப்பினர்களும் (Sub-race) உலகில் உற்பவிக்கும் சமயங்களிலேயே, பொதுவாய்ப் புதிய மதமொன்றை ஸ்தாபிக்க, லோககுருவானவர் தோன்றுகிறார். அவர் தோன்றும் விதம் எப்படியெனில் தம்முடைய உபயோகத்திற்காக ஓர் சரீரத்தைத் தேர்ந்தெடுத்து அதை நேர்மையான கருவியாக்கிக்கொண்டு, அதனாலேயே தாம் நிறைவேற்றவேண்டிய கார்யங்களைச் செய்து முடிக்கின்றனர். கார்யம் முடிந்தவுடன் இச்சரீரத்தை விட்டுத் தம் தேஜோமயமான சரீரத்தையே திரும்ப அடைகின்றனர். திரும்ப இன்னொருதரம் மநுஷ்யர்களுக்குள் அவதாரம் செய்ய நேரும்வரை அதிலேயே இருக்கின்றனர்.

மேற்கூறிய மூலஜாதிகளில், ஒன்றாகிய ஆரியர்களுக்குள் முதன் முதல் அவர் வியாஸராகத் தோன்றினர். அப்போது சம்பலம்

2 2 3



என்ற நகரத்தில் குமாரர்களுடன் வஸித்துவந்தார்; நமது ஆர்ய வர்க்கத்தினரை முதன் முதல் ஏற்படுத்துங்கால், மேலே யெழுதியபடி வேறொரு சரீரத்தையும் தேர்ந்தெடுக்காமல், தம்முடைய நிஜ சரீரத்திலிருந்த பிரகாரமே மனிதர்களுக்கு உதவி புரிந்தனர். நமதாரிய வம்சமானது பால்ய பர்வத்திலிருந்தபோது, நமது முன்னோர்களாகிய, மநு குலத்தவர்க்குள்ளேயே வேறு சரீரத்தைத் தேர்ந்தெடுக்கும்படி யாதொரு அவசியமும் ஏற்படவில்லை. அக்காலத்தில் வியாஸரும், மநுவும் ஸஹோதரர்களாகவே சுவேதத்வீபத்தில் வசித்து வந்தார்கள், இப்போது சீனவில் கோபி பாலைவனமாயிருப்பது அக்காலத்தில் ஸமுத்ரமாயிருந்தபோது, சுவேதத்வீபம் என்ற தீவு அதிலிருந்ததாகத் தெரிகிறது.

ஆனல் ஒவ்வொரு மூலஜாதியிலும், உள் வகுப்புக்கள் ஒவ்வொன்ருய் உற்பவித்து, ஒவ்வொன்றும் ஓரோர் புதிய தேசத்திற் குடியேறி, அங்கங்கே ஸ்திரமாய் அமைந்த பிறகு, லோககுருவானவர் முன்சொன்ன பிரகாரம், அவ்வவ் வகுப்பினர்களுக்குள், தாம் தேர்ந்தெடுத்த ஓர் சரீரத்தில் உட்புகுந்து, அதன் மூலமாய் உலகத்திற்கு ஞானோபதேசம் செய்வார். உதாரணமாக, வியாஸரே எகிப்து தேசத்திற்குச் சென்று, அங்கே (கிரேக்கர்களால் ஹேர்மீஸ் என்று சொல்லப்பட்ட) டெஹுடி, தாத் என்ற பெயர்களுடன், அரேபியர்களுக்கும் எகிப்தியர்களுக்கும், தேஜஸே (வெளிச்சத்தை) ஆத்மா என்று உபதேசித்தார். பாரஸீகத்திற்குப் போய், அங்கே ஸாராதுஷ்டிரா என்ற பெயர் பூண்டு, அக்நியே ஆத்மா என்று அவர்கட்குபதேசித்து, சுத்தம் அல்லது தூய்மை என்னும் குணத்தையே கடைப்பிடிக்கும்படி வற்புறுத்தினர். பாரஸீகத்தில் யாருடைய சரீரத்திற் புகுந்து ஸாராதுஷ்டிராவாக விளங்கினரோ, அவர்தான் இப்போது K. H. என்று சொல்லப்பெறும் மஹாத்மாவாவர். பிறகு கிரீஸ் தேசத்தில் ஆர்பியஸ் என்ற திருநாமத்துடன் தோன்றி, அவருடைய கீத வித்யையால் எல்லோருடைய மநத்தையும் தன் வயப்படுத்தி, அங்கே ஸௌந்தர்யம் என்பதைப் பிரதான அம்சமாய்க் கொண்ட ஓர் மதத்தை ஸ்தாபித்தார், மறுபடி இந்தியாவில் ஸித்தார்த்தர் என்னும் இளவரசனுடைய சரீரத்தை உபயோகித்து, ஞானதீக்ஷையிற் கடைமுறைகள் அனைத்தையும் அடைந்த பிறகு, ஈசுவரனின் திருவருட் செயலோடு ஒருமைப்பட்டார். ஞானத்திற் பூரணரானர், அவர் அவ்விதம் நாற்பத்தைந்து வருஷம் மாசற்ற வாழ்வாய்க் காலங்கழித்து, அச்சரீரத்தைவிட்டு அகன்று தம்மிருப்பிடமேகினர். இன்னமும்கூட அவ

நுடைய சாயையானது நம் உலகத்திற்கு, அவருடைய அன்பின் மிகுதியால், அநுக்ரஹத்தையே விளைத்து வருகிறது.

பிற்பாடு, லோககுரு ஸ்தானத்திற்குத் தம்முடைய வாரிசாக மைத்ரேய மஹரிஷியை நியமித்தார். புத்தர் இவ்வுலகத்தைவிட்டு நீங்குமுன், போதிஸத்வர்களாயும் புத்தர்களாயும், மைத்ரேய மஹரிஷிக்கும் பின்வார்சாக வருவதற்கு, ஸம்மதமுடைய இன்னும் இரண்டு மஹான்களிடம் உறுதிமொழி வாங்கிக்கொண்டார்.

மைத்ரேய மஹரிஷியும் காலக்கிரமத்தில் பாலகிருஷ்ணனாக அவதரித்தார். ஸ்ரீபாலகிருஷ்ணன் என்ற திருநாமத்தைச் சொன்ன மாத்ரத்தில் பக்தி பரவசர்களாவேன், இன்றைக்கும் 3½ கோடி ஜனங்கள் ஹிந்துக்களாக உள்ளார். அவருடைய பாலலீலைகளால், அவரைத் தரிசித்தோர் ஹிருதயங்களில் அன்பினைப் பெருக்கினரன்றோ! யௌவன தசையடைந்தவுடன், ஹிமாசலத்திலுள்ள தம் வாஸஸ்தானத்திற்குச் சென்றார். அதற்கடுத்த அவதாரமாகத் தான் பாலஸ்டைன் தேசத்தில் ஹீப்ரு ஜாதியாரான ஜீஸஸ் என்ற புண்யருடைய சரீரத்திற் புகுந்து, மூன்று வருஷங்கள் லோகத்தில் நடமாடினார், மிகுந்த காருண்யத்தோடு அநேக நற்செயல்களால் அக்காலத்தில் அத்தேசத்தினர்க்கு அருள் புரிந்தனர். ஆயினும் அறிவிலிகளுடைய தீக்குணத்தால் அவர் சரீரம் கொலையுண்டது. அதனாலேயே பிற்காலங்களில். தியாகமே கிறிஸ்தவ மதத்தின் பிரதான அம்சமாக விளங்கியது. ஸுர, நரகணங்களெல்லாருக்கும் (தேவர்கட்கும் மநுஷ்யர்கட்கும்) ஞானாசார்யரான மைத்ரேயரை (கருணாமூர்த்தியை) நாம் இப்போதும் எதிர் பார்க்கிறோம். நக்ஷத்ர தூதர்காள்! ஜகந்நாதனுடைய திருவரவை, உயர நிமிர்ந்து எதிர்பார்த்த வண்ணம் இருங்கள். பரிபூர்ணமான ஆநந்தங்கொள்க, அவர் விரைந்து வருகிறார். ஸூக்ஷ்ம லோகத்தில் அவர் வந்து விட்டார். அங்கே யடிக்கின்ற, மணிச் சத்தமானது இப்பூலோகத்திலும் எதிரொலிக்கின்றது. அதைக் கேட்டுப் பரமாநந்தமாய் மகிழ்வோமாக.

அன்னிபெஸண்டு,

(21) இவ்விந்தியாவில், மித்தியாசாரம் தாழ்ந்த ஜாதியார்களை எவ்விதம் நடத்தி வருகின்றதென்பதைக் கருதிப் பார். நெஞ்சம் புண்படச் செய்கின்ற அன்பற்ற கொடுமையை உண்டாக்கி வருகிறது.

அதன் அற்ப அடையாளங்கூட உன்னிடத்தில் உண்டாகாதபடி நீ மிகவும் ஜாக்கிரதையாகவிரு.

(22) அவர் அன்பே ஆகையால், அவருடன் நீ ஐக்கியப்பட இச்சித்தால், நீ ஸ்வலாபேச்சையை முழுமையும் விட்டு, அத்தியந்தம் பிரேமையோடு கூடினவனாக வேண்டும்.

(23) மேன்மார்க்கத்திலேறிய மனிதன் தன் ஹிருதயத்தில் நிரம்பி நிற்கும் ஈசுவர வாத்ஸல்யம் உலகெங்கும் பிரவேசித்துப் பிரகாசிக்க அவன் ஒரு ஜீவித அக்கினி ஜ்வாலைபோல் இருக்கிறான்.

(24) அன்பானது ஈசுவரனுடன் ஒன்றுகூடியிருக்க விரும்பும் ஒரு ஸங்கல்பம், தீர்மானம்.

(25) அது (அன்பு) ஈசுவரனோடு ஒன்றுகூடியிருக்க விரும்பும் இச்சைதானென்றாலும், உன் சொந்த ஆயாசம், வருத்தம் இவைகளிலிருந்து நீ விலக அல்ல. ஆனால் உனக்கு ஈசுவரனிடமிருக்கும் அத்தியந்த பக்தியால், அவர் மார்க்கத்தை அனுசரித்து அவர் செய்வதுபோல் செய்வதே.

(26) இச்சங்கற்பம் சித்திபெற வேண்டுமாயின், அது உனது பூர்ணஸ்வபாவ குணமாகி, வேறு ஒரு குணமும் வர இடங்கொடாதிருக்கவேண்டும்.

(27) நீ ஈசுவரனோடு ஐக்கியப்பட விரும்புவது, உனது ஸ்வப்பிரயோஜனத்துக்காக இராது. உன் மூலமாய், ஈசுவரா நுக்கிரஹ அன்பு, மற்ற உன் உடனொத்த மனிதர்களுக்கும் பெருகும்படி நீ ஒரு வழியா யேற்பட வேண்டும்.

(28) உன் மனதைப் பரோபகார சிந்தையிலேயே பூர்ணப்படுத்திக்கொள்வாயாகில், உனக்குப்பொழுது ஸ்வப்பிரயோசனத்தை யெண்ணுவதற்கே அவகாசமிராது.

(29) நீ எப்பொழுதும் சாந்தனுயும், உபகாரியாயும், விவேகத்துடன் கூடினவனுயும், பிறருக்கிணங்க நடக்கக்கூடியவனுயும் இருக்கவேண்டும்.

(30) குருநாதன் சந்நிதான பரிசுத்த வொளியில் அவரைப் போலாக வேண்டுமென்ற இச்சை ஒன்று த்விர மற்றெல்லா இச்சைகளும் நசிக்கின்றன.

(31) ஸத்,சித், ஆநந்தம் இம்மூன்றும் ஈசுவர ஸ்வரூபத்தின் மூன்று தோற்றங்கள், அவர் தொண்டர்களில் ஒருவராகச் சேர்த்துக்கொள்ள விரும்பும் நீயும் அவரது ஸ்வரூபத் தோற்றத்தின் அம்சங்களை உலகத்தில் காட்ட வேண்டும்.

## ஆகஸ்டு மாசம்.

மாசாந்தர அப்பியாசம்:—உன் மனத்தை வசப்படுத்த வேண்டும்; அதைத் திரிந்து கொண்டிருக்க விடவேண்டாம்.

### வார அப்பியாசம்.

(1) எந்தக் காரியத்தை நீ செய்துகொண்டிருந்தாலும், அதிலேயே உன் மனதை நிறுத்து, அப்பொழுது அக்காரியம் நன்ருய்ச் செய்யப்பட்டு முடியும்.

2227



(2) "குருநாதன் இதைக் குறித்து என்ன நினைப்பார்," என்று அடிக்கடி நீ நிதானித்துப் பார்க்கவேண்டும். நீ முற்றிலும் சத்தியமாய் நடக்கப் பயிலவேண்டும். முதலில் சத்திய எண்ணத்தையே கொள்ளவேண்டும்.

(3) மற்றவர்களைக் குறித்து உனக்குள்ள அபிப்பிராயம் உண்மையானதாயிருக்கவேண்டும். அவர்களைக் குறித்து உனக்குத் தெரியாத விஷயங்களில் நீ அபிப்பிராயங் கொள்ளக்கூடாது.

(4) துக்கத்திலாவது, கஷ்டத்திலாவது, ஆழ அமுங்கியும் சகாயத்தை விரும்பியும் இருக்கின்ற யாரையேனும் நீ ஆலோசித்தறிந்து, தினந்தோறும் அவன்மேல் உன் அன்பான சிந்தனையைத் தீவ்ரமாய்ச் செலுத்து.

(5) உன் மனதைச் சோம்பேறித்தனமாயிருக்கவிடாதே. எடுத்த காரியம் முடிந்ததும், நல்ல எண்ணங்களே உன் மநத்தில் வந்து தங்கும்படி எப்பொழுதும் நல்ல எண்ணங்களே உன் மனத்தைப் பின்பற்றி நிற்கட்டும்.

## தினசரி அப்பியாசம்.

(1) எந்தக் காரியத்தை நீ செய்துகொண்டிருந்தாலும், அதிலேயே உன் மனத்தை நிறுத்து.

(2) மனத்தில் பதற்றம் வாாமல் மநத்தை நிலைபெறும்படி செய்து கொள்ளவேண்டும். அப்படியானால் மநஸ் கலக்கமற்று சாந்தமாயிருக்கும்.

(3) மனது நீ அல்ல, அது, உன் உபயோகத்திற்காக நீ அடக்கியாளவேண்டிய ஓர் கருவி.

228



(4) மனத்தளர்ச்சிக்கும், சோகத்திற்கும் நீ இடங் கொடாதே. மனத்தளர்ச்சி பிசகானது. உனக்கது, எப்பொழுதாவது சம்பவித்தால், அதை உடனே நீ தள்ளிவிடு.

(5) உன்னுடைய சித்தவிர்த்தி இருக்கவேண்டியபடியிருந்தால் உனது செய்கைகளைப்பற்றிக கவலையிராது.

(6) எதை குருநாதன் நினைக்க மாட்டாரென்று நினைக்கிறயோ, அதை நீ எப்பொழுதும் நினைக்கலாகாது:

(7) நீ உன் மனத்தை அடக்கவேண்டும். அதைத் திரிந்துகொண்டிருக்க விடவேண்டாம்.

(8) அடிக்கடி உன் எண்ணங்களை நிதானித்துப்பார்த்து குருநாதன் இதைப்பற்றி என்ன நினைப்பார் என்று சிந்திக்கவேண்டும்.

(9) மனோவாக்குக்காயங்களில் எப்பொழுதும் நீ சத்தியவானுயிருக்கக் கற்றுக்கொள். முதலில் மனத்தைச்சத்தியமான வழியில் பழக்கவேண்டும். பிறகு ஸத்யமானது தானுகவே மற்ற இருகரணங்களின் மூலமாய் விளங்கும்.

(10) அசத்திய எண்ணங்களும், விவேகமற்ற மித்தியாசாரங்களும் உலகத்தில் அநேகம் உள. இவைகளுக்குட்ப்பட்டிருக்கும் எவனும் அபிவிருத்தியடைய முடியாது.

(11) ஒரு எண்ணத்தை அநேகம் பேர்கள் ஒரேவிதமாய்க் கொண்டிருந்தாலும் சரி, வெகு காலமாய் அது ஜனங்களால் நம்பப் பட்டிருந்தாலும் சரி, ஜனங்களால் உத்கிருஷ்டமென்று நினைக்கப்பட்ட புஸ்தகங்களில் அது எழுதப்பட்டிருந்தாலும் சரி, இக்காரணங்களால் அதை நீ அங்கீகரிக்க வேண்டியதில்லை.

(12) அதை நீயே ஆலோசித்துப் பார்த்து, நியாய மானது தானுவென்று நீயே தீர்மானித்துக் கொள்ளவேண்டும். ஒரு விஷயத்தைப்பற்றி, ஒன்றுந் தெரியாத ஆயிரம் ஜனங்கள் அதைக் குறித்து ஒரே விதமாய் அபிப்பிராயங் கொண்டிருந்தாலும், அவ்வபிப்பிராயத்தால் ஒரு பிரயோஜனமுமில்லை யென்பதை ஞாபகத்தில் வை.

(13) மேன் மார்க்கத்தில் செல்ல இச்சிப்பவன், ஒவ்வொரு காரியத்தையும் தனக்குத்தானே ஆலோசித்து நிதானிக்கப் பயிலவேண்டும்.

(14) இவ்வுலகிலுள்ள பெருங்கெடுதிகளிலும், பங்தங்களிலும் மித்தியாசாரம் என்பது மிக வலியதாகும்.

அதிலிருந்து உன்னை நீ முழுவதும் விடுவித்துக்கொள்ளவேண்டும்.

பிராணிகளைப் பலிகொடுத்து வருவது, மித்தியாசாரம். இதைப்பார்க்கிலும் கொடிய மித்தியாசாரம், மனிதன் தனது ஆகாரத்திற்கு மாம்சத்தை ஆவசியகப்படுத்துவது. இவ்விரு வகையிலுமுண்டாகும் பயங்காமான மிருக வதையை நீ ஆலோசித்து நிதானி.

(15) மற்றவர்களைக் குறித்து நீ கொள்ளும் அபிப்பிராயம் உண்மையானதாக விருக்கவேண்டும். அவர்களைக் குறித்து உனக்குத் தெரியாத விஷயங்களில், நீ அபிப்பிராயங் கொள்ளலாகாது.

(16) மற்றவர்களெப் பொழுதும் உன்னைக் குறித்து நினைத்துக் கொண்டிருப்பதாக நீ சங்கியாதே.

2-30



(17) உனக்குத் தீங்கென்று நீ நினைக்கின்றவொன்றை ஒரு மனிதன் உனக்குச் செய்தாலும், உன்னைக் குறித்தது என்று நீ நினைக்கின்றவொன்றை அவன் சொன்னாலும் "அவன் எனக்குக் கெடுதி செய்ய எண்ணங் கொண்டான்" என்று நீ உடனே நினைக்காதே. அநேகமாய் அவன் உன்னை நினைக்காமலே யிருந்திருக்கலாம்.

(18) ஒவ்வொரு ஜீவனுக்கும் அதனதன் சொந்த கஷ்டங்களிருக்கின்றன! அதனதன் எண்ணங்களே முக்கியமாய் அதனதனைச் சுற்றி நிற்கும்.

(19) ஒருமனிதன் உன்னிடத்தில் கோபமாய்ப் பேசினால் "அவனெனக்கு விரோதி, எனக்குக் கெடுதி செய்ய விரும்புகிறான்" என்று நினையாதே. அனேகமாய் வேறு யாராவதொருவன், அல்லது வேறு ஏதாவது ஒரு விஷயம் அவனைக் கோப மூட்டியிருக்கலாம், நீ அவனுக்கு எதிர்ப்பட்ட காரணத்தினால், அக்கோபத்தை உன்னிடம் அவன் காட்டலாம், அவனுடைய செய்கை மூடத்தனம். கோபம் எப்பொழுதும் மூடத்தனம் தானே, ஆகையினால் அவனைப்பற்றி நீ தவறாய் நினைக்கவேண்டாம்.

(20) வம்புப்பேச்சுக்குக் காரணம் கெட்ட எண்ணம். அதுவே ஒரு பாதகம். ஏனெனில் ஒவ்வொருவனிடமும், ஒவ்வொரு வஸ்துவிலும் நன்மை இருகின்றது; அவ்விதமே, ஒவ்வொருவனிடமும், ஒவ்வொரு வஸ்துவிலும் கெடுதியுமிருக்கிறது. நமது சித்த விர்த்திப் பிரயோகத்தால் இவ்விரண்டையும் நாம் விருத்தி செய்யலாம்; இவ்விதமாய்

ஜீவபூத விகாஸத்திற்கு, நாம் அனுகூலமாயாவது விக்கினமாயாவது ஏற்படலாம். நாம் ஈசுவர சங்கற்பத்தை அனுசரிக்கலாம் அல்லது எதிர்க்கலாம்.

(21) உனது கெட்ட எண்ணம் உனது சகோதரனைத் தப்பிதஞ்செய்ய ஏவுகிறது; ஏனெனில் அவன் இன்னும் பூர்ணாபிவிருத்தியடைந்திராவிடில், அவனை நீ நினைக்கின்றபடியே ஆக்கிவிடலாம்.

(22) ஒவ்வொரு தினமும் துக்கத்திலும், கஷ்டத்திலும் மூழ்கியாவது, சகாயத்தை விரும்பியாவது இருப்பதாக உனக்குத் தெரிந்திருக்கும் யாரையேனும் ஆலோசித்தறிந்து, அவர் பால் தீவ்ரமாய் உன் அன்பான சிந்தனையைச் செலுத்து.

(23) நற்காரியங்களில் உன் மனச் சக்தியை எப்போதும் உபயோகி. ஜீவபூத விகாஸத்துக்கு நீ அநுகூலமான ஒரு சக்தியாய் ஏற்படு.

(24) இன்னொருவனிடமுள்ள கெடுதியை நீ நினைப்பாயாகில், மூன்று கெட்ட காரியங்களை நீ அதோடு கூடவே செய்கின்றாய்.

உன்னைச் சுற்றியுள்ள அயற் பக்கங்களிலும், உன் சகோதரனிடத்திலும், உன்னுடைய மனதிலும், நல்ல சித்தவிர்த்தியை அகற்றி, கெட்ட சித்தவிர்த்தியை வியாபிக்கச் செய்துகொண்டு, உலகத்தில் துக்கத்தை விருத்தி செய்கின்றாய்.

(25) பெரும்பான்மையோர் தங்களுக்கு நேரிடும் அல்பசங்கடங்களுக்காகக் கிலேசப்பட்டுக்கொண்டு மிகுந்த

காலத்தை விருதாவில் போக்கிக்கொள்வது போலல்லாமல், நீ அவ்வித கிலேசத்தை நிவர்த்தித்துக்கொள்ளவேண்டும்.

(26) ஒரு செய்கையெவ்விதம் இதரர்களைப் பாதிக்குமென்பதை ஜாக்கிரதைக் குறைவால் கவனியாது, மறந்துவிடுவதால் அதிக துன்பமுண்டாகிறது. நீ செய்யும் காரியங்கள் என்ன பலன்களை விளைவிக்குமென்று நீ ஆலோசிக்கவேண்டும்; இல்லாவிடில்யோசியாமல் நீ கொடும் பாதகங்களுக்கு உட்பட்டு விடவேண்டிவரும்.

(27) உன் மானவிக சரீரம், கர்வத்துடன் பிரிந்து நின்று, தன்னை மேலாகவும் மற்றவர்களைக் குறைவாகவும் கருத, இச்சிக்கின்றது.

(28) ஆடம்பரக் கிரியைகள் ஆநாவசியமென்று நீ உணரவேண்டும்; இல்லாவிடில், அவைகளைச் செய்யாதவர்களைவிட நீ சிரேஷ்டனென்று உன்னை நினைப்பாய்.

(29) உன் சரீரம் ஒன்றை விரும்புகையில் உனக்கு அது யதார்த்தமாய்த் தேவையாவென்று நிதானி, ஏனெனில் நீயே ஈசுவரன்.

(30) மனதைச் சோம்பலாயிருக்கும்படி விடாதே, எடுத்த காரியம் முடிந்ததும் நல்ல எண்ணங்களே உன் மனத்தில் வந்து தங்கும்படி, எப்பொழுதும் உன்மநத்தைப் பின்பற்றி நிற்கட்டும்.

நீ பேசுமுன் விழிப்புடன் ஆலோசி.

(31) கர்வத்தினின்று உன் மனதை நீக்கு; ஏனெனில் கர்வம் அறிவீனத்தினின்றே வருகின்றது. ஞானமில்லாதவன் தன்னைப் பெரியவன் என்றும், இது அது என்று குறித்துக் காட்டக்கூடிய பெரிய காரியங்களைச் செய்தவனென்றும் நினைக்கின்றான்; ஈசுவரன் ஒருவன் தான், பெரியவர். அவரால்தான் எல்லா நற்காரியங்களும் செய்யப்படுகின்றன, என்று விவேகி யறிகிறான்.

(இன்னும் வரும்)

K. S. ராமசந்திர ஐயர்.

வர்க்கத்திற்குபகரிப்பவராவர். இதிற் சேர விரும்புவோர் எம்மதஸ்தராயும், அல்லது ஓர் மதத்தையும் தழுவாமலுமிருக்கலாம். ஷை மூன்று நோக்கங்களே இச்சபைக்குப் பிரதானம். பிறமதங்களையும் பாரபக்ஷமின்றி ஆராய்வதால்,மததுவேஷம் நீங்கியவர்களாயும், அபிப்ராய பேதங்களால் ஒற்றுமை குன்றாதவர்களாயும் இச்சபையோர் உளர். வெறும் நம்பிக்கையால் மட்டுமல்லாமல், தத்துவத்தை நேருக்கு நேராய் அறியவேண்டிய அவாவினாலேயே, இச்சங்கத்தினர் அனைவரும் ஒரு மனப்பட்டிருக்கின்றனர். தேர்ந்த படிப்பினாலும் ஆழ்ந்த சிந்தனையாலும், சுத்த சர்யையாலும், உயர் நோக்கங்களிற் கொள்ளும் ஸ்திர பக்தியாலுமே ஒருவன் தத்வத்தையடையக்கூடும். தீவ்ரமான உழைப்பின் பயனான அநுபவத்தால் தான் ஒருவனுக்கு உண்மை கைகூடும். நிர்ப்பந்தத்தால் கட்டுப்படுத்தும் கொள்கை எதுவும் உண்மையாகாது, அறிவில்லாமல் நம் பலாகாது. எல்லோரிடத்தும் பொறுமையும், பொறுமையற்றவர்களிடமுங்கூட நமது கடமையாகக்கொண்டு, அன்பையே காட்டுவதும், அறிவிலிகளை நிந்தித்து துவேஷியாமல், அவர்களுக்கு போதிப்பதுமே லக்ஷியமெனக் கொள்வதோடும், ஒவ்வொரு மதமும் பிரஹ்மக்ஞானத்தின் ஓர் அம்சமென்றும், அதனாலதை அசட்டை செய்யாதுபடிக்கவேண்டுமென்றும் ஒருவரையும் ஓர் மதத்தினின்று இன்னொரு மதத்திற்குப் பெயர்க்காமல், அந்தந்த மதத்தில் அழகாயுள்ள உபதேசங்களை யநுஸரிக்கச்செய்தலே மேன்மை யென்றும் இச்சபை வற்புறுத்துகின்றது. உண்மையே இச்சபையின் உயர் லக்ஷ்யம். உபசாந்தமே இச்சபையோரிடம் விளங்கும்.

பிரஹ்மக்ஞான தர்சனம் எல்லா மதங்களுக்கும் ஆதாரமான தத்துவங்களின் தொகுதி. அது இம்மதத்தைத்தான் சார்ந்தது, அதைத்தான் சார்ந்தது என்று சொல்லுதல் இயலாததாம். அதன் தத்துவ விளக்க முறையானது, உலக வாழ்க்கையிற்றோன்றும் ஸம்சய விபரீதங்கள் அனைத்தையும் விலக்கி, எத்தகைய உயர்ந்த நீதி நெறியுடனும்,பரமகாருண்யத்தோடும் விகாஸமுறையானது நடைபெற்று வருகிறது என்பதை நுண்ணிய விவரங்களுடன் பிரகாசப்படுத்துகின்றது. அகண்டமான வாழ்க்கையில் மரணமென்பது அடிக்கடி நேரும் ஓர் ஸம்பவமென்றும். ஸ்தூலதேஹம் நீங்கியவுடன் கட்டவிழ்த்து விடப்பட்டவன்போல, சிரமத்தினின்று விடுபட்டு அதிமேன்மையான ஸூக்ஷ்மலோகத்தில் ஜீவன் விழித்துக் கொள்கிறானென்றும் விவரிக்கின்றது. ஞானிகள் நிதர்சனமாயறிகின்றவாறே, நமது யுக்திக்கும் பொருத்தமாக, பற்பல மதங்களின் கொள்கைகளையும் ஆசரணைகளையும் ஸூக்ஷ்ம அர்த்தங்களுடன் விளக்குகின்றது.

பிரஹ்மக்ஞான ஸபை அங்கத்தினர்கள் இவ்வுண்மைகளைப் படித்து, அவைகளின் பிரகாரமே ஆசரிக்க முயலுவர், கற்று, உணர்ந்து அடங்கவும், உயர்நலம் பெறவும், விடாமுயற்சியோடுழைக்கவும், பிரியப்படும் ஒவ்வொருவரும் இச்சபையிற் சேரலாம். அப்படிச்சேர்ந்த ஒவ்வொருவரும் போலியாக இராமல், உண்மையான பிரஹ்மக்ஞானியாகவே ஒழுகுவாராக.

# தமிழ்ப் புத்தகங்களின் விளம்பரம்.

| | | ரூ. அ. பை. |
|---|---|---|
| 1. | வேதாந்த சூளாமணி | 1—4—0 |
| 2. | பதஞ்சலியோக சூத்திரம் | 1—0—0 |
| 3. | இயேசு கிறீஸ்து என்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்கமுறைநூல் | 1—0—0 |
| 4. | மாதுஸ்ரீ அந்நிபெஸண்ட் அம்மையாரின் யோக உபந்யாஸங்கள் | 0-12—0 |
| 5. | மனிதன் வமிசாவளியின் உண்மை | 0—8—0 |
| 6. | பிராசீன தர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும் | 0—6—0 |
| 7. | ஔவையோகக்குறள் (தமிழினின்று ஆங்கிலமொழிபெயர்ப்பு) | 0—4—0 |
| 8. | ஸர்வசமய ஐகமத்ய ஸாரஸங்கிரகம் | 0—4—0 |
| 9. | இந்துமத தூஷணையின் பரிகாரம் | 0—4—0 |
| 10. | மௌநவாக்கு | 0—2—0 |
| 11. | ஸந்மார்க்க தீபம் | 0—2—0 |
| 12. | மாதுஸ்ரீ அந்நிபெஸண்ட் அம்மையார் சரித்திரம் (படத்துடன்) | 0—1—0 |
| 13. | மஹாலய பக்ஷமும் நவராத்திரியும் | 0—1—0 |
| 14. | எண்ணங்களின் இரஹஸியம் படத்துடன் | 0—1—0 |
| 15. | காயத்ரீ | 0—1—0 |
| 16. | காயத்ரீராமாயணம் (ஸமஸ்கிருத மூலமும் தமிழ்மொழி பெயர்ப்பு) | 0—1—0 |
| 17. | மாதுஸ்ரீ ஹெலினாம்பாள் அம்மையார் சரித்திரம் | 0—0—6 |
| 18. | ஹிந்து என்பவன் எவன்? | 0—0—6 |
| 19. | லோககுருவின் அவதாரங்கள் | 0—0—6 |
| 20. | பகவான கௌதம புத்தரின் சரித்திரம் | 0—0—6 |
| 21. | வெள்ளியம்பலம் என்ற ஞானிகளின்சங்கம் | 0—1—0 |
| 22. | மோனம் என்பது ஞானவரம்பு | 0—0—6 |
| 23. | உதாஸீந ஸாது ஸ்தோத்ரம் (ஸம்ஸ்கிருத மூலமும் தமிழ் மொழி பெயர்ப்பும் | 0—6—0 |
| 24. | மஹாத்மாக்களும் அவர்களையடையும் மார்க்கமும் | 0—0—6 |
| 25. | தேவாலயம் | 0—0—3 |
| 26. | பிரஹ்மஞானமும் பிரஹ்மஞான சபையும் | 0—0—6 |
| 27 | ஸந்மார்க்கமுறையில் ஹிதோபதேசம் | 0—1—0 |
| 28. | மநீஷா பஞ்சகம் | 0—1—0 |
| 29. | குருசிஷ்ய ஸம்பந்தம் | 0—1—0 |

---

மேற்கண்ட புத்தகங்கள் தேவையானவர்கள் "மதுரை பிரஹ்மஞானஸபை பிரஸிடெண்டு அவர்களுக்கு" அல்லது "மானேஜர் தியாஸாபிகல் பப்ளிஷிங்ஹவுஸ், அடையாறு சென்னை" என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம். 100 புத்தகங்களுக்கு 20 கமிஷன் கொடுக்கப்படும்.